# பொதுக் கட்டுரைகள்

TB
031(9)
NO7
146720

# பொதுக் கட்டுரைகள்

(உயர்வகுப்பு மாணவர்களுக்கு உரியது)

வித்துவான்: சா. குமாரசாமி,
வித்துவான்: மா. இராமசாமி,
தமிழாசிரியர்கள்
விருதுநகர் இந்து நாடார் உயர்நிலைப் பள்ளி,
மதுரை—9.

செல்வநிலையம்
12.சென்ட்ரல் மார்க்கட் சந்து,மதுரை

பதிப்புரிமை] 1967 [விலை ரூ 1.

நிலைய வெளியீடு : 26
முதல் பதிப்பு : செப்டம்பர் 1967

146720

விலை ரூ. 1—00

TB
031(9)
N67

சென்னையில் கிடைக்குமிடங்கள்:

**P. T பெல் & கோ,**
7, சுங்குராம செட்டி தெரு,
சென்னை 1.

**M. தாமோதரம் & கோ,**
புத்தக வியாபாரம்,
கார்ப்பரேஷன் புரூட் மார்க்கட்,
சென்னை — 1.

# இந்நூல்

★ பள்ளி இறுதி அரசாங்கத் தேர்வுகளிலும், பிற வகுப்புத் தேர்வுகளிலும் கேட்கப்பட்ட தலைப்புகளில் சிறந்தவற்றைப் பொறுக்கி எடுத்து இக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளது.

★ பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கும், புகுமுக வகுப்புத் தேர்வுக்கும் இக்கட்டுரைகள் மிகவும் பயன் தரும்.

★ இக்கட்டுரைகள் சுருக்கமாகவும், படித்து எழுதுவதற்கு எளிதாகவும் எழுதப்பட்டுள்ளன.

★ தேர்வுகளில் எவ்விதமான கட்டுரையைக் கேட்பினும் மிக அழகாகவும், எளிதாகவும் எழுதி மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெறலாம்.

★ அறிவும், ஆற்றலும், அனுபவமும் மிக்க ஆசிரியர்களால் இந்நூல் பன்முறை நன்கு ஆராய்ந்து இயற்றப் பட்டுள்ளது

★ எனவே இந்நூல் உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்கு மிகவும் பயன் தரும் என்பது உறுதி-

**செல்வ நிலையத்தினர்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | காலைக் கதிரவனின் கோலக் காட்சி | ... | 1 |
| 2. | கிராம வளர்ச்சி | ... | 3 |
| 3. | உணவுப் பற்றுக்குறையும், அதனைப் போக்கும் வழிகளும் | ... | 6 |
| 4. | இன்பச் செலவினால் விளையும் நன்மைகள் | ... | 10 |
| 5. | எங்கள் பள்ளியில் உரிமைவிழாக் கொண்டாட்டம் | ... | 13 |
| 6. | எனது வீட்டில் கொண்டாடப்பட்ட ஒரு விழா | | 16 |
| 7. | எங்கள் பள்ளி இலக்கிய மன்றம் | ... | 18 |
| 8. | செய்தித் தாள்களும் அவற்றின் பயன்களும் | ... | 21 |
| 9. | ஒழுக்கம் விழுப்பம் தரும் | ... | 24 |
| 10 | முயற்சி திருவினை ஆக்கும் | ... | 27 |
| 11. | நூல் நிலையங்களும் அவற்றின் பயன்களும் | ... | 30 |
| 12. | நான் விரும்பும் நூல் | ... | 33 |
| 13. | கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் பயன்களும் | ... | 36 |
| 14. | யாதும் ஊரே யாவரும் கேளிர் | ... | 39 |
| 15 | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு | ... | 41 |
| 16, | தமிழர் நாகரீகம் | ... | 44 |
| 17. | தமிழர் பண்பாடு | ... | 46 |
| 18. | தமிழர் இலக்கிய மாண்பு | ... | 49 |
| 19. | காடுகளும் அவற்றின் பயன்களும் | ... | 53 |
| 20. | வானொலியின் நன்மைகள் | ... | 56 |
| 21. | விஞ்ஞானத்தின் நன்மை தீமைகள் | ... | 59 |
| 22 | பண்டைத் தமிழர் மற வாழ்க்கை | ... | 64 |
| 23. | படக்காட்சியால் விளையும் நன்மைகள் | ... | 68 |
| 24. | மாணவர்களின் சமுதாயத் தொண்டு | ... | 72 |
| 25. | நான் விரும்பும் கவிஞர் | ... | 76 |
| பத்திரங்கள் | | | |
| 26 | விற்பனை ஆவணம் | ... | 83 |
| 27. | குத்தகை ஆவணம் | ... | 85 |
| 28. | ஈடு அடைமானம் | ... | 87 |
| 29. | குடிக்கூலி ஆவணம் | ... | 89 |

# பொதுக் கட்டுரைகள்

## 1. காலைக் கதிரவனின் கோலக் காட்சி

**முன்னுரை:-** இறைவன் இயற்கையின் வடிவாய் இலங்குகின்றான். இயற்கையின் அழகுக் காட்சிகளை மெய்மறந்து நோக்குவோர் உள்ளம் உருகி இன்பம் காண்கின்றனர். இறைவனின் பேரருள் திறத்தை எண்ணி எண்ணி இனிய கவிதைகளைப் படைக்கின்றனர். அக்கவிதைகளில் இயற்கையின் கூறுகளாகிய செங்கதிரோனையும் வெண்மதியையும் காண்கின்றோம். அலைகடலையும் நீள்வானையும் பார்க்கின்றோம் மலைகளையும் ஆறுகளையும் வயல்களையும் வளமிகு சோலைகளையும் பார்த்துப் பேருவகை அடைகின்றோம். இன்பத்துள் இன்பம் பயக்கும் இயற்கையின் அழகுக் காட்சிகளுள் காலைக் கதிரவனின் பேரெழிலை இவண் காண்போம்.

**தோற்றம்:-** வானநங்கை காரிருளாம் திரைச்சீலையைப் போர்த்தி இருக்கின்றாள். அச்சீலையில் மின்னும் ஒளிக்கற்கள் கண்ணைப் பறிக்கின்றன. நிலமடந்தை தன் அருமைக் குழந்தைகளை அணைத்துத் துயில்கின்றாள். மென்காற்று அங்கும் இங்கும் அசைகின்றது. வினைத்திறம் படைத்த ஓவியக்கலைஞன் தன் தூரிகையால் வண்ண வண்ண நிறங்களை மெல்லக் கீழ்வானில் தீட்டுகின்றான். வானம் செங்குழம்பு ஆகின்றது. கடல் தங்க அலைகளை வீசிப் பொங்கி ஆரவாரம் செய்கின்றது. தெளிவு பெற்ற அழகிய ஓவியமாக நிலமடந்தை தோன்றுகின்றாள். அவள் அழகிலே தான் எத்தனை காட்சி! எத்தனை மலர்ச்சி! எத்தனை மகிழ்ச்சி!

**உயிரினங்களின் இன்பம்:-** கதிரவனின் வருகைக்குப் புள்ளினங்கள் வரவேற்புப் பாக்களைப் பாடி மகிழ்கின்றன. விலங்கினங்கள் இன்ப உணர்வு பெற்றுப் பல்வேறு முழக்கங்களை எழுப்பி ஆரவாரம் செய்கின்றன. சலசலக்கும் நீரோடைகள், நீலவானத்தை முத்தமிடப் பார்க்கும் வானளாவிய மரங்கள், அழகு மலர்களை ஏந்தி அசைந்தாடிக் கொண்டிருக்கும் கொடிகள் அனைத்தும், 'புற இருளைப் போக்கிப் புத்தின்பம் தந்த பொற்சுடரே! வருக என வாழ்த்துகின்றன.

**ஒரு செய்தி:-** ஒரு வியப்புச் செய்தி. பேராசிரியர் சுந்தரனார் காட்டும் வண்ணக் காட்சி. காகங்கள் ஏன் கரைகின்றன? காரணம் இதுவே. கதிரவனே காரிருளைக் காய்கின்றான், ஆதலின், தன்னையும் காரிருள் என்று காய்ந்து விடுவானே என்ற அச்சத்தால், நான் காரிருள் அன்று, 'காகம் காகம்' என்பதைப் புலப்படுத்தக் 'கா கா' என விடியற்காலைப் பொழுதில் காகம் கரைகின்றது, எண்ணிப் பார்மின்! எத்துணை இன்பம்!

**விண்ணும் மண்ணும்:** விண்ணெல்லாம் பொன்னொளியின் தேக்கத்தைக் காணலாம். மண்ணெல்லாம் மண்ணோடு இசை கலந்த பாக்களின் ஆக்கத்தைக் காணலாம். கதிரவனின் கைபட்டுக் கரிய மேகக் குஞ்சுகள் பவளமாகின்றன. மண்ணிலோ வெண்மையும் செம்மையும் நீலமும் பசுமையுமாகிய பல்வேறு வண்ணக் கலவைகளாலாகிய அணிகலன்களாய்ப் பூக்கள் தோன்றுகின்றன. உழவன் ஏர் பூட்டிக் கழனிக்குச் செல்கின்றான். எழில் நங்கையர் வீடுகளின் வாயில்களில் கோலமிட்டுப் பூவிட்டு அழகுபடுத்துகின்றனர். வானுக்கும் மண்ணுக்கும் போட்டி. கதிரவனின் கதிர்கள் மலை முகடுகளைத் தழுவும் போதும், அலைகடல்

களைத் தீண்டும் போதும் நிலநங்கை தன் அழகால் வான் மங்கையை வெல்கின்றாள். அவளின் வெற்றியைப் பூக்களின் மலர்ச்சியாலும் அருவிகளின் தோற்றத்தாலும் அறிந்து கொள்கின்றோம்.

**வாழ்த்து:** நீலக்கடலின் மேலே தோன்றும் கதிரோனே! இருளை அகற்றி இன்பம் அளிக்கும் எழிலார் தலைவனே! பொங்கும் ஒளியை எங்கும் பரப்பிப் புவியைக் காப்பவனே! உனது பேரெழிலை எங்ஙனம் கூற முடியும்? அழகெல்லாம் நீ தந்த ஒளியால் அன்றோ ஆக்கம் பெறுகின்றன. விண்ணுக்கும் மண்ணுக்கும் உள்ள உறவை உணர்த்தவோ செக்கச் சிவந்த வண்ணத் தட்டாய்ச் சுழன்று அடிவானில் எழுகின்றாய்? கோடிகோடி அழகுத் தட்டுகள் கூடிச் சுழல்வதுபோல், கடலாம் மயிலில் முருகன் ஏறிக் காட்சி தருவதுபோல் தோன்றுகின்ற உன்னை வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்!

**முடிவுரை:** கதிரவனைக் கடவுளாக வணங்குதல் பழந்தமிழர் பண்பாடு. "ஞாயிறு போற்றுதும்" என்று இளங்கோவடிகளும், "உலகப் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற் கண் டாஅங்கு" என்று நக்கீரரும் கூறுவதை நோக்கின், கதிரவனை வாழ்த்துதலும் போற்றுதலும் தமிழர் பண்பாடு என்பதை இனிது புலப்படுத்தும்.

## 2. கிராம வளர்ச்சி

**முன்னுரை:** இந்தியநாடு வாழ்வும் வளர்ச்சியும் பெறவேண்டுமா? உணவில் தன்னிறைவு காணவேண்டுமா? அறிவுப்பயிர் விளைய அன்பு மணம் கமழ இன்பத் தேன் பாயச் செழிப்புடன் விளங்க வேண்டுமா? அப்படி

யாஞல், இலட்சக்கணக்கான சிற்றூர் மக்களின் வாழ்வில் புதிய ஆற்றல் உருவாக வேண்டும். அதன் மூலமே அவர்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சியைக் காண முடியும் அவ்வளர்ச்சிக்குச் செய்ய வேண்டுவன யாவை என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**வேளாண்மையும் கிராமமும்:** சிற்றூர்களில் உழவர்கள் வாழ்கின்றூர்கள். அவர்கள் ஊர் வளர்ச்சி பெற வேண்டுமாஞல் அவர்களின் பொருளாதாரமும் தொழிலும் வளர்ச்சி பெறவேண்டும். பழைய காலத்தைப் போலவே வாழவேண்டும் என்ற பழமைக் கொள்கையை விடுத்து, "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே" என்பதை அறிந்து புதிய விஞ்ஞான ஆய்வுப்படி வேளாண்மை செய்ய வேண்டும். கூட்டுறவு முறையில் உழவுத் தொழில் செய்து, "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்" என்ற வான் புகழ் குறளுக்குச் சான்ருகத் திகழவேண்டும். அப்பொழுதுதான் வரும் ஏரும் நடக்கும்; கிராமத்தின் சீரும் செழிக்கும்.

**கைத்தொழிலும் கிராமமும்:** பண்டை நாளில் கிராமங்கள் செல்வத்தின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. இடைக்காலத்தில் கிராமமக்கள் பிழைப்பைத் தேடியும், வாழ்வை நாடியும் நகரங்களில் குடிபுகுந்தனர். கிராமங்களில் மக்கள் தொகை குறைந்தது. நகரங்களில் மக்கள் தொகை மிகுந்தது. கிராமங்களில் கைத்தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு ஆங்கில அரசு ஆதரவு காட்டவில்லை. இதஞல் பொருள் ஒரு சிலர் கையில் குவிந்தது. வறுமை பலர் வாழ்வில் புகுந்தது, இவ்வறுமையைப் போக்குவதற்கு மீண்டும் புதிய புதிய சிறுதொழில்

அமைப்புக்களை உருவாக்கவேண்டும். கொல்லன் பட்டறை, தச்சுப்பட்டறை போன்றவற்றைப் புதிய முறையில் உருவாக்கிச் செயல்படுத்தவேண்டும். மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்களை உருவாக்கும் முறையில் தொழிலில் பயிற்சி அளித்து, தக்க ஊதியமும் கிடைக்க வாய்ப்பளித்தால் கிராமத்தில் தொழில் வளர்ச்சி உண்டாகும்.

**கிராம மக்களின் கல்வி:** "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை" என்றார் வள்ளுவப் பெருந்தகை. அத்தகைய கல்விச் செல்வம் ஊர் மக்களுக்கு வேண்டாமோ? எண்ணும் எழுத்தும் கண்களன்றோ? கல்வி வளர்ச்சி பெற்றால் தான் ஊரும் நாடும் உலகமும் வளர்ச்சி பெறமுடியும். இதனை உணர்ந்தே அரசினர் ஊர்கள்தோறும் பள்ளிகள் நிறுவியுள்ளனர். மக்கள் நல்ல முறையில் ஒத்துழைத்துக் கல்வி கற்க வேண்டும். தாய்மொழிக் கல்வி அளித்தால்பாமரமக்கள் ஏமமுறுவர். அன்பு நெறியும் இலக்கியப்பண்பும் இன்ப வாழ்வினை ஒளிவிளக்காக்கும்.

**பொதுநலத்திட்டங்கள்:** நல்ல குடிநீர் வசதி, இரவு நேரங்களில் வீதிகளில் ஒளி வீசும் விளக்குகள், மாலை நேரத்தில் இன்னிசை வழங்கும் ஒலி பரப்பி, ஓய்வு நேரத்தில் உள்ளம் பண்படைய உதவும் நூல்களைக் கொண்டுள்ள நூலகம், நோய் நீக்கும் மருத்துவ மனைகள், மலிவு விலையில் பொருள் கிடைப்பதற்கான அங்காடிகள் போன்றவைகளைக் கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது கிராமங்களும் நகரத்தைப் போன்ற வளர்ச்சி பெறமுடியும். உழவர்களும் பிற தொழில் மேற்கொண்டவர்களும் சிறப்புடன் வாழச் சிற்றூர்களே சாலச் சிறந்தவை எனப் போற்றுவர்.

**முடிவுரை:** இயற்கையின் பேரழகு பொலியும் இன்ப உறைவிடங்களாய், தொழில் பல போற்றும் எழில்மிகு கலைக்கூடங்களாய், தென்றலின் நறுமணமும் செந்தமிழின் கவிமணமும் கமழ்கின்ற கலையரங்குகளாய்ச் சிற்றூர்கள் விளங்க மேற்கூறிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்பது வான்புகழ் வள்ளுவர் நன்மொழி. அம்மொழி போற்றுமின்! நன்மையே நாடுமின்!

## 3. உணவுப் பற்றுக்குறையும் அதனைப் போக்கும் வழிகளும்

**முன்னுரை;** "பசி வந்திடப் பத்தும் பறந்திடும்" என்பது பழமொழி. பசியில்லாமல் மக்கள் வாழ்வதற்கு அரசு துணைபுரிய வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து, குடிப்பெருமை, கல்வி, அழகு ஆகியவை எல்லாம் பசி வந்த போழ்து அழிந்துவிடும் என்பது மணிமேகலை ஆசிரியரின் விளக்கம். ஆதலின், நாட்டு மக்கள் அனைவரும் நலமுற வேண்டுமானால் உணவுப் பற்றுக்குறை நீங்கவேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

**பற்றுக் குறை ஏற்படக் காரணம்:** உணவுப் பொருட்கள் போதுமான அளவு கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? பருவ மழை பொய்ப்பதாலும், பயிர்களுக்கு நோய் நொடி ஏற்படுவதாலும் உணவுப்பொருள்கள் கிடைப்பது அரிதாகின்றது. இதனை இயற்கைப் பஞ்சம் என்று குறிப்பிடலாம். பிறிதொன்று, பருவமழை பெய்தும் விளைச்சல் நன்கு இருந்தும் உணவுப் பொருள்களை விலை கொடுத்து வாங்க முடியாத நிலையை ஏற்

படுத்துகின்றனர். இதனையே செயற்கைப் பஞ்சம் என்று கூறலாம். நம் இந்தியாவில் இவ்விருவகைப் பஞ் சங்களும் ஆட்சி செய்கின்றன. மக்கள் சொல்லொணுத் துயரடைகின்றனர்.

**பற்ருக் குறையினுல் உண்டாகும் கொடுமை:** மக்கள் பாடுபடுவதெல்லாம் உணவுக்காக என்று சொன்னுல் சிலர் ஏளனம் செய்யலாம். அச்சிலரும் ஒளவையார் கூறுவதை எண்ணின் தம் கருத்தை மாற்றிக் கொள்வர். "மக்கள் உணவின்மையால் வாடும் பொழுது இறை வனே வந்து காட்சி கொடுத்தாலும் விரும்பார். அவ் விறைவனும் சோற்றின் வடிவமாகக் காட்சி அளித்தால் உள்ளங் குளிர்வார்," என்று காந்தியடிகள் கூறுகின் ருர். "தனி யொருவனுக்கு உணவில்லையெனில் செகத் தினை அழித்திடுவோம்" என்று பாரதி கூறியதை எண் ணின், பசிக்கொடுமையைப் போக்கவேண்டும் என்பதில் அவருக்கு இருந்த ஆவேசத்தைக் காணலாம். பற் ருக்குறையின் காரணமாக அரிசிக் கடைகளிவ் பகல் முழுவதும் காத்து நிற்பதும், காத்து நின்றும் பயனில்லா மல் வெறுங்கையுடன் வீட்டுக்குச் செல்வதும், வீட்டி லுள்ள குழந்தைகள் தாயை நோக்குவதும், அந்நங்கை தன் தலைவனை நோக்குவதும், அவன் தன் தலைவிதியை நோக்குவதுமாக நொந்து நொந்து வெந்து மடிகின்ற நிலை உண்டாகின்றது. இக்கொடுமையைப் போக்குவ தன்றே நம் முதற்கடமையாகும்.

**பற்ருக் குறையைப் போக்கச் சிலவழிகள்:** இந்தியா போன்ற பெரிய நாடுகளில் ஒரே சமயம் எல்லா மாநி லங்களிலும் பருவமழை பொய்ப்பதில்லை. அதனுல்விளைச் சல் உள்ள பகுதிகளிலிருந்து விளைச்சல் இல்லாத பகுதி களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பிப் பஞ்சத்தைப்

போக்கலாம். அதுவும் போதவில்லை என்றால் வெளிநாடு களிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது தவிர்க்க முடியாதது. இது ஒரு தற்காலிக ஏற்பாடே. இதனையே நிரந்தர அமைப்பாகக் கொள்ளின் பெருந் தீங்கு பயக்கும். பருவமழை பொய்த்தாலும் கிணறுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வேளாண்மை செய் தால் ஓரளவு பற்றுக்குறையைப் போக்கமுடியும்.

விளைச்சல் இருந்தும் பற்றுக்குறை நிலை காணப்படு கின்றது. இது உணவுப் பொருள்களைப் பதுக்கி அதன் மூலம் நிறைய ஆதாயம் பெறவேண்டும் என்ற நோக் கத்துடன் செயல்படுவதால் உண்டாக்கப்படுவதாகும். இக்குறைபாட்டை அகற்ற வேண்டுமானால் அரசினரின் தீவிர நடவடிக்கையும், சீரான முறையில் மக்களுக்குக் கிடைக்க உதவி புரிதலும் அவசியம். இம்முறைகளால் பற்றுக் குறையினால் ஏற்படும் தீங்குகளைக் களையலாம்.

**உற்பத்திக்கு ஊக்கம் அளித்தல்:** உற்பத்தி போதிய அளவு இல்லாததால் பற்றுக்குறை உண்டாகின்றது. இதற்கு வழி என்ன? உழவுத்தொழில் புரிபவர்களுக்கு ஊக்கமும் ஊதிய ஆக்கமும் அளித்தல் இன்றியமையா தது. நல்ல உரம், தரமான விதை, இரசாயின மருந்து கள் ஆகியவற்றை அளிக்கவேண்டும். அணைக்கட்டுகள், குளங்கள், கால்வாய்ப்பாசன வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மிகுந்த விளைச்சல் காண்பதற்கு மிகமிக அவசியமாகும்.

**உணவுப் பொருள்களைப் பேணுதல்:** உற்பத்தியில் எவ்வளவு கவனம் செலுத்துகின்றோமோ அதுபோலப் பொருள்களைக் காப்பதிலும் கவனம் செலுத்தவேண்டும். எலிகளுக்கு இரையாகும் தானியங்கள், விருந்துகளில்

சிந்திச் சீரழியும் உணவுப் பொருள்கள், அன்றன்றுடம் உபயோகிக்கும்பொழுது போதிய கவனம் செலுத்தாமையால் வீணுகும் பொருட்கள் இவற்றுல் சிறு துளி பெருவெள்ளமாக மாறுவதுபோல மிகுந்த பொருள்களை நம் நாடு இழக்கின்றது. இவற்றில் மக்கள் கவனம் செலுத்திஞல் மிகுந்த உணவுப் பொருள்கள் மிச்சமாகும். உணவுப் பற்ருக்குறையை ஓரளவு நீக்க முடியும்.

**புதிய சிந்தனை:** சிலர் உணவுப் பொருள்களுக்குரிய பயிர்களைப் பயிரிடாமல் பணப் பயிர்களை மிகுதியாகப் பயிரிடுகின்றனர். சிலர் விளைச்சல் நிலத்தைத் தோட்டங்களாகவும், மேய்ச்சல் நிலங்களாகவும் ஆக்கியுள்ளனர். அந்நிலங்களில் எல்லாம் மீண்டும் உணவுப் பயிரிட வேண்டும். எங்கெங்கு இருபோகங்கள் செய்யமுடியுமோ அங்கங்கு இருபோகம் பயிரிட ஊக்கம் தர வேண்டும். காடும் மேடுமாக உள்ள நிலங்களையெல்லாம் பண்படுத்தி விளை நிலங்களாக்க வேண்டும். படித்த இளைஞர்களை வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்தவேண்டும். அவ்வாறெல்லாம் செய்தால் தன்னிறைவு பெறுவதுடன் வெளி நாட்டினர்க்கும் உணவுப் பொருள்களை அனுப்ப முடியும்.

**உழவனுக்குச் சிறப்பு:** நாட்டின் உயிர்நாடியான உழவர்கள் சமுதாயத்தில் போற்றப்படவேண்டும். ஏழ்மையும் அறியாமையும் நீங்கியவர்களாய், பல தொழில்களும் வாணிகங்களும் செய்வோர்களைக் காட்டிலும் மதிக்கப்படக் கூடியவர்களாய் விளங்கத் துணைசெய்ய வேண்டும். அப்பொழுதுதான் உழவை அனைவரும் போற்றுவர்.

**முடிவுரை:** பசியும் பிணியும் நீங்கி, வாழ்வும் வளமும் சுரக்க, உணவு உற்பத்தியைப் பெருக்க, முற்படு

வோம். பற்றுக்குறையாம் பஞ்சப்பேயை எட்டி உதைப்போம். 'பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே' என்று கம்பன் சொன்னபடி ஏரும் நடக்கும். அன்றே இயலிசை நாடகமும் நடக்கும். நல்ல அரசும் நடக்கும். உழைப்பவர் நினைத்தால் பிழைக்குமோ பஞ்சம்?

## 4. இன்பச் செலவினுல் விளையும் நன்மைகள்

**முன்னுரை:** இன்பத்தை விரும்புதலே மனிதனின் நோக்கமாக இருக்கின்றது. அவ்வின்பத்துள்ளும் தலை சிறந்த இன்பம் அறிவின்பம். அவ்வின்பத்தைத் துய்ப்பதற்கும் யான் கண்ட இன்பம் இவ்வாறு இருந்தது என்பதைத் தெரிவிப்பதற்கும் பயணம் சிறந்த கருவியாக விளங்குகின்றது. ஆதலின், இன்பச் செலவால் பெறக் கூடிய பயன்களைக் காண்பது நலம் பயக்குமன்றோ?

**காட்சியின்பம்:** ஆண்டு முழுவதுமே பள்ளிப் பாடப் புத்தகங்களிலும், இருண்ட அறைகளிலும் அடங்கிக் கிடந்து சோர்வுற்ற உள்ளங்களுக்கு இன்பச் செலவு சிறந்த புத்துணர்ச்சியை ஊட்டும். கடலைப் பார்க்காமல் கடலைப்பற்றிப் பேசுதலும், மலையைப் பார்க்காமல் அதன் அழகு பற்றி வரைதலும், அருவிகள், சுனைகள், எழில்மிகு ஏரிகள் இவற்றையெல்லாம் கண்ணாரக்கண்டு மகிழாமல் வாழ்தலும் குறைபாடுடைய வாழ்க்கையாகும். காட்சி இன்பமே மேலானது. ஆதலின் திருவள்ளுவரும், "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து" என்ற குறளில் காட்சியையே முதலிற் குறிப்பிட்டமை காண்க.

ஐம்பொறிகளிலும் முதன்மையாக வைத்துப் பேசப் படுவன கண்கள். இவையே அழகாம் எழில்கலை நங்கையை வரவேற்கும் வாயில்கள். மலர்களையுங் குன்றுகளையும் படம் பிடிக்கும் எழில் கருவிகள். அக்காட்சிகளை உள்ளமெனும் கருவறையில் சேமித்து வைக்க உதவும் கலைஞர்கள். அறிவு எனும் கோயிலுக்குள் நுழைய வழி காட்டும் ஒளி விளக்குகள். ஆதலின், சிறந்த இன்பமுற வேண்டுமானால், நிறைந்த அறிவினைப் பெறவேண்டுமானால், நேர்முகமாக அறிய உதவும் இன்பச் செலவில் பங்கு கொள்ளுதலே சிறந்ததாகும்.

அறிவு: அறிவை மேலும் மேலும் பெருக்கிக் கொள்வதற்குப் பயணம் சிறந்த கருவியாக விளங்குகின்றது. ஆங்கிலம், செர்மனி, இரசியம், பிரெஞ்சு போன்ற மொழிகளை எவ்வளவுதான் படித்தாலும் முழுமையான அறிவைப் பெறுதல் அரிது. அம்மொழிகள் வழங்குகின்ற நாடுகளில் சிலமாதங்கள் தங்கி இருந்தால் மொழி அறிவையும், இலக்கியச் சிறப்புக்களையும் தொழில் நுட்பங்களையும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

தாவரங்கள், பறவைகள், பிற உயிரினங்கள் ஆகியவற்றை நேரில் பார்க்கும்பொழுது, அடைகின்ற அறிவின்பத்தை ஆயிரம் புத்தகங்கள் படிப்பதின் மூலமாகக் கூடப் பெறமுடியாது. அதனால்தான் அறிஞர்கள் உலகம் சுற்றுவதையும் பல பழமையான அரண்மனைகள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைக் காண்பதையும் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

பண்பாடு: பலபகுதிகளில் வாழ்கின்ற மக்களுடன் பழகும் வாய்ப்பினைப் பயணத்தில் ஈடுபடுவோர் பெற முடியும். அம்மக்களின் பழக்க வழக்கங்களையும் சமுதாய

அமைப்புக்களையும் வழிபாட்டு முறைகளையும் அறிந்து ஒப்பு நோக்க முடியும். ஒருவருக்கொருவர் உபகாரம் செய்து வாழ்வதே வாழ்க்கையின் நோக்கம் என்பது நன்கு புலனாகும். கிணற்றுத் தவளைபோலத் தம்மையே யாவரினும் சிறந்தவர் என்று எண்ணும் அகங்காரமும் ஆணவமும் நீங்கும். 'கற்றது கைமண்ணளவு' என்று கூறிய ஒளவையின் அறிவுரையும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மொழிந்த பூங்குன்றனாரின் பொன் மொழியும் நம் நெஞ்சத்தே பூக்கும்.

நினைவு: மலைமீது நிற்கும் பொழுது இயற்கை அன்னையின் பெருமிதத் தோற்றத்தைக் காண்கின்றோம். கடலில் செல்லும் பொழுது விந்தை விந்தையான எண்ணங்களுக்கு மத்தியில் நமது சிறுமையையும் இயற்கையின் பெருமையையும் அறிகின்றோம். தவழும்மேகங்கள், வீழும் அருவிகள், நெஞ்சத்தை வஞ்சிக்கும் நீர்நிலைகள் ஆகியவற்றையெல்லாம் காணும் பொழுது, 'இயற்கை அன்னையே! உனது பேராற்றலைப் பாடும் பேற்றினைக் கவிஞர்களுக்கு அளித்தாய்! உனது அன்புச் செயல்களை அறிந்து பணிபுரியும் ஆற்றலை விஞ்ஞானிகளுக்கு அளித்தாய்! வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி நீ விளங்குகின்ற திறத்தை மெய்ஞ்ஞானிகளுக்கு உணர்த்தினாய்! உன்னை வாழ்த்துவதன்றோ வாழ்வின் நோக்கம்'' என்று நெஞ்சம் பேசும்.

முடிவுரை: இன்பச் செலவின் மூலம் மக்களுக்கு அறிவு விரிவடைவதுடன் இறையன்பும், தாய் மொழிப் பற்றும், தாய் நாட்டுப்பற்றும் உண்டாதல் உறுதி. பற்றுக்களும் உலகம் அளாவிய பற்றுக்களாய் விழுமிய பயனைத் தருதலின், பயணத்தைப் போற்றுதலும் மேற்கொள்ளுதலும் பண்புடையாளரின் நற்கடமையாகும்.

## 5. எங்கள் பள்ளியில் உரிமை விழாக் கொண்டாட்டம்.

**முன்னுரை:** எங்கள் பள்ளியில் பல விழாக்களை ஆண்டுதோறும் கொண்டாடுகின்றோம். அவ்விழாக்களைக் கொண்டாடுவதில் இன்பம் மட்டுமா தோன்றுகின்றது? அறிவும் திறனும் அல்லவா உண்டாகின்றன. அழகும் கலையுணர்வும் அன்றோ தோன்றுகின்றன. நல்ல பண்புகளும் நல்ல செயல்களும் மலர்தற்கு காரணமான அவ்விழாக்களுள் எங்கள் பள்ளியில் கொண்டாடிய உரிமை விழாவே பெருமை பூக்கச் செய்த திரு விழாவாகும்.

**விழாக் கொண்டாடுவதற்கு முன்பு:** விழாக் கொண்டாடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே, விழாவினை நல்ல முறையில் நடத்துவதற்கு ஒரு செயற்குழுவினைத் தலைமையாசிரியர் அமைத்தார். மாணவர்களில் சிலரும் அதில் பங்கு கொண்டனர். விழாவின்போது பள்ளியை அலங்கரிப்பதற்கும், விழாவுக்கு வருகை தரும் சிறப்பு விருந்தினர்களை வரவேற்பதற்கும், கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், இன்சுவைப் பொருள்களை வழங்குவதற்கும் தனித்தனிக் குழுக்களை அமைத்தார்.

**விழாக் கொண்டாட்டம்:** நம் இந்திய நாடு உரிமை பெற்ற திருநாளான ஆகஸ்டு மாதம் பதினைந்தாம்நாள், அதிகாலையில் குளித்துச் சீருடை அணிந்து 7-30 மணி அளவில் பள்ளி சென்றோம். வண்ணத் தோரணங்களும் அழகு மலர் பூத்தாற் போல் விளங்கும் காகித மலர்களும், பள்ளியின் அழகுக்கு அழகூட்டினாற்போல்

விளங்கின. நாங்கள் எங்களுக்கு உரிய இடத்தில் அமைதியாக நின்றோம். 8 மணி அளவில் விழாவுக்குத் தலைமை தாங்க வந்த எங்கள் தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் திருமதி சானகி அம்மாள் அவர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார். கொடி வணக்கம் செய்தோம். கொடி வழிபாட்டுப் பாடல் பாடினோம்.

பின்னர் எங்கள் பள்ளித் திறந்த வெளிக் கலையரங்கில் கூட்டம் நடைபெற்றது. பள்ளித் தாளாளர் அவர்களும் தலைமையாசிரியர் அவர்களும் உரிமை விழாவின் சிறப்பினையும், உரிமை பெறுவதற்காகப் பாடுபட்ட விடுதலை வீரர்களின் தியாக வரலாறுகளையும் சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் விடுதலை விழாக் கொண்டாடுவதின் நோக்கத்தையும் விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு பற்றியும் விரிவுரை ஆற்றினார்கள்.

சொற்பொழிவு முடிந்ததும் நாங்கள் தயாரித்த கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பாரதியாரின் வீர வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட அருமையான கருத்தோவிய நாடகம் நடைபெற்றது. அதில் பாரதியாராக நடித்த மாணவனின் பேச்சும் பாட்டும் அவையோரைக் கவர்ந்தன. அடுத்துக் காந்தியடிகளின் வாழ்க்கையை வில்லடிப்பாட்டில் சில மாணவர்கள் பாடினார்கள். பழமையும் புதுமையும் கலந்து, கவிதையும் உரை நடையும் பிணைந்து, ஓசையும் பொருளும் அமைந்திருந்த அக்கலை நிகழ்ச்சி எங்கள் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்றது. இறுதியில் தமிழாசிரியர் நன்றி நவின்றார். நாட்டு வணக்கத்துடன் விழா முடிவுற்றது.

**பயன்கள்:** நாங்களே திட்டங்கள் தீட்டவும் செயல் படவும் இத்தகைய விழாக்கள் உதவுகின்றன. விடுதலை வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், நாட்டுப்பற்று மொழிப்பற்றுப் போன்றவைகளையும் அறியத் துணை செய்கின்றன. நாம் அவர்களைப் போல உயர்ந்த குறிக் கோளுடன் வாழ வேண்டும் என்னும் நோக்கத்திற்குத் தூண்டுகோலாக விளங்குகின்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதின் மூலம் தெளிந்த மொழி அறிவினை யும் கற்பனை வளத்தினையும் மனத்திட்பத்தினையும் பெறுதற்கு விழாக்கள் வாய்ப்பளிக்கின்றன. ஓவியம் வரைதல், பாட்டுப் பாடுதல், நாடகம் எழுதி நடித்தல், பள்ளியை அழகு செய்தல் ஆகிய கவின்கலைகளில் ஈடு படுவதால் உள்ளம் பண்படைவதற்கு அவை ஆக்கம் தருகின்றன.

**முடிவுரை:** "பாலெல்லாம் நல்லாவின் பாலாகுமோ? நூல் எல்லாம் வள்ளுவர் செய்நூல் ஆகுமோ?" என்றனர். அதுபோல் விழாவெல்லாம் உரிமை விழா வுக்கு ஒப்பாகுமோ? என்ற எண்ணம் பிறக்க வேண் டும் "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோம்" என்ற பாரதியின் பாடலை எண்ணி, மொழியின் உரிமையும் வாழ்வின் உரிமையும் மிக நெருங்கிய தொடர்புடையது என்று கருதிச் செயல்பட வேண் டும். தாழ்வுற்றும் வறுமை மிஞ்சியும் இருக்கின்ற நம் தாயகத்தை வாழ்விக்க, நாம் ஒவ்வொருவரும் உறுதி பூண வேண்டும். இவற்றில் வெற்றி பெற்றால் தாம் நாம் முழு உரிமை பெற்றவர்க ளாவோம்! விழாவின் நோக்கத்தை நிறைவு செய்தவர் கள் ஆவோம்.

## 6. எனது வீட்டில் கொண்டாடப்பட்ட ஒரு விழா

**முன்னுரை:** விழாக் கொண்டாடுவது என்றால் எங்களுக்கு மிகுந்த இன்பம். தீபாவளி, கார்த்திகை, பொங்கல் ஆகிய திருவிழாக்களை ஆண்டு தோறும் எங்கள் வீட்டில் கொண்டாடி வருகின்றோம். அவ்விழாக்களுள் எங்கள் வீட்டில் கொண்டாடிய பொங்கல் திருவிழாவை நினைத்தாலும் இன்பம் பொங்கும். எழுதினாலும் இன்பம் பொங்கும்.

**திருவிழாவுக்குமுன்பு:** "ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போல் மார்கழி மாதம் திருவிழாக்கோலம் பூண்டு விளங்கும். தெருவெல்லாம் திருப்பாவை, திருவெம்பாவை பாடும் இன்னொலி கேட்கும். தைநங்கை வரவுச்கு வாழ்த்துப் பாவினைப் பாடுவது போல அஃது எங்களுக்குத் தோன்றும். எங்கள் வீட்டின் முன்பு நாள்தோறும் விடியற்காலையில் மாக்கோலம் இடுவர். மஞ்சள் நிறப் பூசனிப் பூவை வைத்து அழகுபடுத்துவர். தைத்திருவிழாக் கொண்டாடப் போகிறோம் என்பதை அறிவிக்கும் அறிகுறியாக அவை காட்சி தரும். வீட்டை வெள்ளை அடித்தும், பிற பொருள்களையெல்லாம் தூய்மை செய்தும், பயனற்ற பழம் பொருள்களை அகற்றியும் அழகுபடுத்தினோம். மனத்திலும் சொல்லிலும் செயலிலும் தூய்மைபெறச் சுற்றுப்புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும் என்னும் நோக்கத்தை இவ்விழாவில் கண்டோம்.

**விழாக் கொண்டாட்டம்:** மார்கழி மாதம் கழிந்தது. தைத்திங்கள் பிறந்தது. அன்று கதிரவன் தோன்றுவ

தற்கு முன்பே எழுந்தோம், விடியற்காலையில் தண்ணீரில் குளித்தோம். புத்தாடை உடுத்தினோம். எங்கள் அம்மா வீட்டிற்குக் கோலமிட்டு அழகுபடுத்தினார்கள். கோலமிட்ட அடுப்பினைக் கிழக்குநோக்கி வைத்தார்கள். அருகில் அழகிய வெண்மணலைப் பரப்பி, அதன் மேல் இலை விரித்துக் காய்கள், கனிகள், செங்கரும்புகள், கிழங்குகள் ஆகியவற்றை வைத்தார்கள். வண்ணத் திரு விளக்கில் எண்ணெய் ஊற்றி ஒளி ஏற்றினார்கள். பூவும் புதுமணமும் பரவ என் தந்தை வழிபாடு செய்தார். அடுப்பில் விறகு மூட்டிப் பானையில் பால் ஊற்றினார்கள். பால் பொங்கியதும் எங்கள் அம்மா குலவையிட்டு, மயிலின் அடிக்குருத்தன்ன வெள்ளிப் பச்சரிசியைப் பெய்தார்கள். பொங்கலும் ஆயிற்று. புது மகிழ்வும் பரவிற்று.

கதிரவன் கீழ்வானில் தோன்றினன். படைத்த பொங்கலும், கனிந்த கதலிப்பழமும், முதிர்ந்த செங்கரும்பும், மலர்ந்த மல்லிகை மலர்களும் படைத்து மீண்டும் கதிரவனை வணங்கினோம். "செங்கதிர் வாழ்க! செந்தமிழ் வாழ்க! எங்கணும் இன்பம் பொங்குக! தங்குக! வான்மழை பொழிக! வையம் வாழ்க!" என்று வாழ்த்தினோம்.

**காரணம்:** எங்கள் தந்தையிடம் இவ்விழாக் கொண்டாடுவதற்குரிய காரணத்தைக் கேட்டோம். அதற்கு அவர், "இவ்விழா நன்றிக் கடன் ஆற்றும் விழா தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடும் விழா. உழைப்பவன் உழைப்பின் பயனை அடைந்த பொழுது மகிழ்ச்சியுடன் இயற்கை அன்னையை வழிபடும் விழா. மழை பொழியவும் நிலம் விளையவும் உறுதுணை செய்கின்ற செங்கதிர்ச் செல்வனை வாழ்த்தும் விழா. உழைப்பில்

பங்கு கொண்ட மாடுகளை மறவாமல் போற்றும் விழா'' என்று குறிப்பிட்டார்,

**விழாவின் பயன்:** ''காக்கை கரவா கரைந்துண் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே யுள'' என்ற வான்புகழ் வள்ளுவர் கருத்தின்படி வாழ்வதற்குத் தூண்டும் திரு விழாவாகப் பொங்கல் அமைந்திருக்கின்றது. உழைப் பவர்க்கே உலகம் உரிமை உடையது என்பதைஉணர்த் தும்பொதுமைக் கருத்தினை நல்கும் திருவிழாவாக இயங் குகின்றது. இயற்கையில் இறைவனை உணர்ந்து, அவ் விறைவனின் அருள் திறத்தினை வாழ்த்தி வழிபடும் விழாவாகத் திகழ்கின்றது. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதை மன்பதைக்கு உணர்த்தும் திரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

**முடிவுரை:** நம் நாட்டில் எத்தனையோ விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் பொங்கல் விழா வானது உழைப்பவர்க்கு உரிமை உணர்வையும், நன்றி மறவா நற்பண்பையும், சமுதாய வாழ்விற்கும் தூய்மைக் கும் அரண் செய்வதாகவும் இருத்தலின், இவ்விழா வைக் கொண்டாடுவதில் இன்பம் காண்கின்றோம். மறு மலர்ச்சி காண்கின்றோம். எனவே, பால் பொங்கட்டும்! வாழ்வு செழிக்கட்டும்! என்று வாழ்த்துகின்றோம்.

## 7. எங்கள் பள்ளி இலக்கிய மன்றம்.

**முன்னுரை:** இளமைப் பருவம் இனிய பருவம். இப் பருவத்தில் உயர்ந்த குறிக்கோள்கள் அரும்பவேண்டும். நல்ல செய்கைகள் தோன்ற வேண்டும். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்'' என்ற பழமொழிக் கிணங்கப் பிற் காலத்தில் சிறப்படையப் போகும் மாண்பினை உணர்த்

தும் குணநலன்களுக்கு வித்திட வேண்டும். அவ்விளமைப் பருவத்தைப் பண்புடையதாகவும் பயனுடையதாகவும் ஆக்கப் பள்ளி வாழ்வில் பல வாய்ப்புக்கள் அமைந்துள்ளன. அவற்றுள் எங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது,

**தோற்றம்:** எங்கள் பள்ளி ஔவை இலக்கிய மன்றத்துவக்க விழா (28—7—67) மாலை 3-30 மணி அளவில் பைந்தமிழ்ப் பாவலர் அ. கி. பரந்தாமனுர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் அவர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் பள்ளித் தலைமையாசிரியர் உயர்திரு. மு. இளமாறன் எம். ஏ; பி. டி, அவர்கள் வரவேற்புரையாம் நல்விருந்தினை வாரி வழங்கி வரவேற்ருர்கள். இலக்கிய மன்றத்தின் நோக்கத்தையும் மாணவர்கள் பெற வேண்டிய பயன்களையும் பள்ளித்தாளாளர் உயர்திரு. தொ. க. துரையரசு பி. ஏ; அவர்கள் இனிய உரையாற்றி எங்கட்குச் சொல்விருந்தும் அறிவுரையாம் நன்மருந்தும் அளித்தார்கள் "மாணவர்கள் பணிவுடையராகவும், இன்சொற் பேசும் பண்புடையராகவும், அறநறி தழுவும் மாண்புடையராகவும் புலமையைப் போற்றும் பொருளுடையராகவும் விளங்க வேண்டும் என்பதைத் திருக்குறள், சீவகசிந்தாமணி, புறநானூறு போன்ற இலக்கியச் சான்றுகளுடன் பேராசிரியர் அவர்கள் விளக்கினுர்கள். அக்கருத்துக்கள் எங்கள் நெஞ்சில் பசுமரத்தாணி போலப் பதிந்துவிட்டன. விழா முடிவில் தமிழாசிரியர் நன்றி நவில நாட்டு வாழ்த்துடன் விழா முடிவுற்றது.

**எங்கள் பணி:** எங்கள் இலக்கிய மன்றத்தின் சார்பில் மாதந்தோறும் புலவர் பெருமக்களின் நினைவு விழாக்களையும், இலக்கியத் தொடர்புடைய சொற்

பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளோம். கல்லூரிகள் உயர் நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரியும் தமிழ்ப் பேராசிரியர்களை வரவழைத்து, அவர்கள் வழங்கிய இலக்கிய இன்பங்களாம் தேனுறுகளைச் செவிகளாம் கால்வாய் வழியாக, உள்ளமாம் வயல்களில் பாய்ச்சி, அறிவுடைமையாம் பயிரை வளர்த்தோம். பண்புடைமையாம் விளைச்சலைக் கண்டோம்.

இலக்கிய மன்றத்தின் சார்பில் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டி போன்றவைகளை நடத்தினோம். அறிஞர் பெருமக்களின் நினைவு விழாக்கள், பொங்கல்விழா ஆகியவற்றில் பங்கு கொண்டு பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டோம். சொற்போர் புரிதல், சிறு நாடகங்கள் எழுதுதல் ஆகிய பணிகளைச் செய்தோம்.

**பயன்கள்:** தேன் தரும்பயன் இனிமை. மலர் தரும் பயன் மணம். அறிவு தரும் பயன் பண்பு. எங்கள் இலக்கிய மன்றமோ இனிக்கும் சுவையாம் தேனைக் காட்டிலும் மேலான இலக்கிய் இன்பத்தைத் தந்தது. மணக்கும் மலரைக் காட்டிலும் மேலான அறிவு மணத்தை அளித்தது. தன்மைபிக்கை ஓங்கவும், குறிக் கோள் நிலைபெறவும், செயல்படும் திறத்தை வளர்க்க வும் உறுதுணை செய்தது. எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் எங்களுக்கு அளிப்பதில் தாயாகத் திகழ்ந்தது. கடமையையும், கட்டுப்பாடுகளையும் உணர்த்துவதில் நண்பனாக விளங்கியது. "இருந்தமிழே உன்னால் இருந் தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண் டேன்" என்ற புலவர் பெருமகனின் பொன்மொழியானது நெஞ்சில் நிலவும்படி விழுமிய மொழிப் பற்றினை ஏற்படுத்தியது.

**முடிவுரை:** எங்கள் பள்ளி இலக்கிய மன்ற நிறைவு விழாவை ஏப்பிரல் திங்கள் கொண்டாடினேம். மாணவர்கள் பிற்காலத்தில் சிறந்தவர்களாக விளங்குவதற்கு இலக்கிய மன்றம் ஒரு பயிற்சிக் கூடம் என்பதை அப்பொழுது அறிந்தோம். தங்கம் ஒளி தர வேண்டுமானல் புடம் போடவேண்டும். வைரம் ஒளி வீச வேண்டுமானல் சாணை பிடிக்க வேண்டும். மாணவர்கள் எதிர் காலத்தில் ஆற்றலுடன் விளங்க வேண்டுமானல் இலக்கிய மன்றங்களில் பங்குகொள்ள வேண்டும்.

## 8. செய்தித்தாள்களும் அவற்றின் பயன்களும்.

**முன்னுரை:** பூந்தோட்டத்தில் பலவண்ணப் பூக்கள் மலர்கின்றன. அவற்றை நல்லின நங்கையர் மென் விரல்களால் கொய்கின்றனர்; மாலையாகத் தொடுக்கின்றனர். அழகும் மணமும் பொருந்திய அம்மாலைகளை நங்கையர் விரும்பி வாங்கிச் சூடுகின்றனர். அவற்ருல் அழகும் இன்பமும் அடைகின்றனர். அவற்றைப் போன்றே உலகமென்னும் பூந்தோட்டத்தில் மலர்ந்த செய்திகள் என்னும் மலர்களை மாலைகளாகத் தொடுத்துச் செய்தித்தாட்களை வெளியிடுகின்றனர்; மாந்தர் வாங்கிப் படித்து இன்பமடைகின்றனர்.

**தோற்றமும் வளர்ச்சியும்:** செய்திகளைக் கேட்பதும் கேட்டவற்றைக் கூறுவதும் இன்று நேற்று தோன்றியதன்று. குறிப்பினுலும் மொழியினுலும் விளக்கத்தெரிந்த அன்றே மாந்தர் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். ஆனல், அவை தனித் தனியாகவும், தொடர்பின்றியும் பலருக்குத் தெரியப்படுத்த முடியாமலும் இருந்திருக்க-

லாம். இக்குறைப்பாடு அச்சு இயந்திர வளர்ச்சி ஏற்பட்டவுடன் ஓரளவு நீங்கியது. அறிவியலில் சிறந்த வளர்ச்சி ஏற்பட்டதும், செய்தித்தாள்கள் அமைப்பிலும் வெளியீட்டிலும் சிறந்த மாறுதல்களைப் பெற்றன.

**நாளிதழ்கள்:** நாளிதழ்கள் செய்திகளைத் தெரிவிப்பனவற்றுள் முதன்மை இடம் பெறுகின்றன. அவை பல்வேறு மொழிகளில் வெளியிடப்படுகின்றன. நம் தமிழ்மொழியில் தமிழ்நாடு, தினமணி, தினத்தந்தி, நம் நாடு, நவசக்தி, முரசொலி முதலிய நாளிதழ்கள் வெளிவருகின்றன. இவ்விதழ்களில் தமிழகத்தில் நடைபெற்ற செய்திகளும், இந்திய நாட்டில் நடைபெற்ற செய்திகளும், உலகில் நடைபெற்ற செய்திகளும் இடம் பெறுகின்றன. மக்களில் பெரும்பாலோர் காலையில் எழுந்தவுடன் மிகவும் ஆர்வமுடன் இவ்விதழ்களைப் படிக்கின்றனர். செய்திகளைப் படித்து மனநிறைவு கொள்கின்றனர்.

**வார இதழ்கள்:** வார இதழ்களில் சில சிறப்புச் செய்திகளை மட்டும் காணலாம். எல்லாச் செய்திகளையும் இவ்விதழ்களில் அறிதல் அரிது. இருப்பினும் கதைகளும் கட்டுரைகளும் அமையப்பெற்றுக் கற்போர் பலரைக் கவருகின்றன. இலக்கியம், சமயம், கலை, அரசியல், மருத்துவம், விஞ்ஞானம் ஆகிய பல்வேறு துறைகளைப் பற்றிய தனித்தனி இதழ்கள் அறிவுத்தேனை ஏந்தி வருகின்றன. மொழி அறிவையும் நல்லுணர்வையும் அளிப்பதில் நண்பன் போன்று நற்றுணைபுரிகின்றன.

**மாத இதழ்கள்:** வார இதழ்கள் மட்டுமின்றி மாத இதழ்களும் மாதம் இருமுறை வரும் இதழ்களும் உள்ளன. இவ்விதழ்களிலும் சிறப்புச் செய்திகள் இடம் பெறு

வதோடு கதைகளும் கட்டுரைகளும் அமையப்பெற்றுள்ளன. நம் தமிழகத்தில் கலைமகள், கலைக்கதிர், மஞ்சரி போன்றவை மாத இதழ்களாகும். தொடர்கதை, நாடகம், சிறுகதை, கவிதை முதலியவைகள் இவற்றின் சிறப்புக்குத் துணைசெய்கின்றன.

**இதழ்களின் சிறப்பு:** செய்தித்தாட்களின் ஆற்றலைச் சொல்லுதல் அரிது. மக்கள் மனத்திலே புதுமைக் கருத்துக்களையும் புரட்சி எண்ணங்களையும் உருவாக்க வல்லவை. ஆட்சியமைப்பையும் பணபலத்தையும் வெல்லவல்ல திறன் எழுத்தாற்றலுக்கு உண்டு. வலிமை வாய்ந்த பேரரசையும் பேனா முனையால் வெல்லமுடியும் என்பதற்கும் பத்திரிக்கைகள் சான்றுகளாக விளங்குகின்றன.

**ஆசிரியர் கடமை:** செய்தித்தாட்களை நடத்துகின்ற ஆசிரியர்கள் நல்லியல்புகள் வாய்ந்தவராக விளங்க வேண்டும் நடுநிலைமையுடன் தெளிந்த எண்ணமும் சிறந்த மொழியறிவும் உடையவராகத் திகழவேண்டும். தாய்மொழிப் பற்றையும் தாய் நாட்டுப்பற்றையும் இரு கண்கள் போலக் கருதி பணியாற்ற வேண்டும். பாமர மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நலம் பயக்கும் நற்கருத்துக்களை அஞ்சாமல் கூறும் ஆண்மை உடையவராக இருக்கவேண்டும். இவ்வளவு சிறந்தபண்புகளையும் ஆசிரியர் பெற்றிருப்பராயின் நாளிதழ்களும் சிறக்கும். நாடும் வளம்பெறும்.

**பயன்கள்:** செய்தித்தாட்கள் சிறந்த முறையில் செயல் பட்டால் மக்களின் நல்வாழ்வு என்னும் மலர் இன்பத்தேன் நிறைந்து அறிவு மணம் கமழ்ந்து எழிலுடன் இலங்கும். நயத்தக்க நாகரிகமும், பிறவும் தம

போற் பேணிச் செய்யும் வாணிக வாழ்வும், வண்ண வண்ணப் பொருள்களை உருவாக்கும் தொழில் நுட்பமும், சிறந்த ஆட்சியமைப்பும் நாட்டில் உண்டாகும். வறுமை, இரத்தல், அறியாமை முதலிய நோய்கள் நீங்கும். கல்வியும் கலையும் சிறக்கும்.

**முடிவுரை:**

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" என்றார் செந்நாப் போதார். இக் குறள் வழியைப் பேணி நாளிதழ்களை நாள்தோறும் படித்து நல்லறிவு பெறுதல் நமது கடமையாகும்.

## 9. "ஒழுக்கம் விழுப்பந் தரும்"

**முன்னுரை:** ஒழுக்கம் என்றால் என்ன? நல்ல நடத்தையையும் நேரிய வாழ்க்கையையும் அறம் தழுவிய செயல்களையுமே ஒழுக்கம் என்று பெரியோர் கூறுவர். ஈண்டு ஒழுக்கம் என்பது நல்லொழுக்கத்தையே குறித்தது. தீயொழுக்கத்தை யன்று. திருவள்ளுவனாரும் 'ஒழுக்கம் விழுப்பம் தரும்' என்றே குறிப்பிட்டார். ஆதலின், இவண் நல்லொழுக்கம் பற்றிக் காண்பது நலம் பயப்பதாகும்.

**ஒழுக்கத்தின் பிறப்பிடம்:** ஒழுக்கம் என்னும் உயரிய நெறி யாவரிடத்துத் தோன்றும்? அடக்கம் உடையாரிடம் அன்றோ பிறக்கும்? அடக்கமே ஒழுக்கம் என்னும் பயிர் விளையும் விளை நிலம். அதனாற்றான் திருக்குறளில் அடக்கமுடைமையின் பின் ஒழுக்கமுடைமை வைக்கப் பட்டது என்பதை உன்னுக.

**ஒழுக்கத்தின் சிறப்பு:** ஒழுக்கத்தின் சிறப்பு யாது? அஃது பொன்னினும் மேலானதா? ஏனைப் பொருள்களினும் மேலானதா? ஆம் அஃது அவை யாவற்றுள்ளும் மேன்மை உடையதே திருவள்ளுவர், 'உயிரைக் காட்டிலும் சிறந்ததாக ஒழுக்கத்தைப் பேணுக' என்று கூறியுள்ளதை நோக்கின் ஒழுக்கத்தின் சிறப்பு வெள்ளிடை மலையென விளங்கும்.

**ஒழுக்கம் பேணுக:** ஏன் ஒழுக்கத்தைப் பேண வேண்டும்; அது சிறப்பைத் தரும்; புகழைத் தரும்; நல் வாழ்வைத் தரும்; மறுமை வாழ்வுக்கு உறுதுணை செய்யும். உயிர் நல்வினை செய்வதற்கு ஏதுவாக இருப்பது போலவே தீவினை செய்வதற்கும் ஏதுவாக இருப்பது. ஆனால், ஒழுக்கமோ ஒருபொழுதும் தீவினைக்கு ஏதுவாகாது. நல்வினைக்கே காரணமாக அமையும்.

**ஒழுக்கமுலடயோர்:** உயர்குடிப் பிறப்பினர் என்று யாரைக் கூறலாம்? ஒழுக்கமுடையவரை. ஒழுக்கமுடையவரை அறிதற்குரிய வழியாது? பெரியோரைக் கண்டவுடன் எழுந்து நிற்றலும், அவர்களை எதிர்சென்று வரவேற்றலும், விடைபெற்றுச் சென்ற பின் மீள்தலும் ஆகிய செயல் முறைகளால் அறியலாம். புறங்கூறுமலும், பிறர் பொருள் விரும்பாமலும், கள்ளுண்ணுமலும், சூதாடாமலும், பொய் கூருமலும், அழுக்காறு கொள்ளாமலும் இருப்பவர்களிடம் ஒழுக்கம் என்னும் ஒண்பொருள் தங்கி நிற்கும். அத்தகையவர்களையே சான்றோர்-பண்புடையாளர்-அறவோர்–அந்தணர் என்று கூறுவர்.

**மாணவர் ஒழுக்கம்:** மாணவர்களாகிய நாம் மேற்கொள்ளத்தக்க ஒழுக்கம் யாது? ஆசிரியர் வரும்பொழுது எழுந்து நிற்கவேண்டும். அவர் அமர்க என்று கூறிய பின் அமர ·வேண்டும். பாடங் கேட்கும் பொழுது

எழுந்து நின்று பணிவுடன் விடை கூற வேண்டும். செல்க என்று கூறியவுடன் செல்ல வேண்டும். காலம் கடவாமல் பள்ளிக்கு வர வேண்டும். பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடன் நடத்தல் வேண்டும். தீய பழக்கங்களை விடுத்து நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ள வேண்டும், மேற்கூறிய நல்லொழுக்கத்தை மாணவர்கள் கடைப்பிடிப்பாராயின் சிறப்படைவர். பெற்றோர் பெருமை அடைவர். நாடு நலம் பெறும்.

**நாலடியார் தரும் விளக்கம்:** நல்லொழுக்க நெறியைக் கடைப் பிடிப்பவர்க்கு அறம் கூற வேண்டியதில்லை என்று நாலடியார் கூறுகின்றார். ஏனெனில், அவர்கள் நல்லொழுக்கத்தின் வகையை உணர்ந்தவர்கள். அயலாரது இரகசியங்களைக் கேட்பதில் செவிடராகவும், அயலாரது மனைவியை நோக்குவதில் குருடராகவும், தீய சொற்களைச் சொல்வதில் ஊமையராகவும் நடந்துகொள்வார்கள். இங்ஙனம் ஒழுகுகின்ற பண்புடையாளர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் உள்ளது.

**முடிவுரை:** நாம் கற்கின்ற கல்வியின் பயன் யாது? அறிவு பெறுதலன்றோ? அவ்வறிவு பெறுதல் எதற்காக? ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு அல்லவா? ஆதலின், உயர்ந்தோர் பலரும் ஒழுகிய நல்லொழுக்க நெறியினை மேற்கொண்டு நடக்க வேண்டும். அவ்விதம் நடக்காதவர் பல நூல்களைக் கற்றாராயினும் கல்லாதவரே ஆவர். எனவே, ஒழுக்கம் விழுப்பந் தரும் என்ற கருத்தை நெஞ்சிற் பதித்து வாழ்தல் நன்று.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

குறள்.

# 10. முயற்சி திருவினை ஆக்கும்.

**முன்னுரை:** ' முயன்றால் முடியாத துண்டோ?" என்பது பழமொழி. எக்காரியத்தையும் முயன்று செய்தால் முடிக்க முடியும் என்பது இப் பழமொழியின் கருத்தாகும் ஆதலின், செயலில் வெற்றி காண விரும்புபவர்களுக்கு முயற்சி இன்றியமையாததாகும். முயற்சியினால் அரும்பெரும் காரியங்களைச் செய்தவர்களே இவ்வுலகில் அழியாப் புகழைப் பெறுகின்றனர். அவர்கள் வரலாறே மனித குலத்தினரால் போற்றப்படுகின்றது. நாமும் அப்புகழ்மிகு வாழ்வைப் பெறவேண்டாமோ?

**முயற்சியிடையோன் யாவன்?** எவன் எடுத்துக் கொண்ட நற்காரியத்தை முடித்தற் பொருட்டு மெய் வருந்தப் பாடுபடுகின்றானோ அவனே முயற்சியுடையவன். அவனுக்கு எத்தகைய இடையூறுகள் நேர்ந்தாலும் அவற்றைக் கண்டு அஞ்சுவதில்லை; தளர்வதில்லை; மேலும் மேலும் முயல்கின்றான். வெற்றிமாலை சூடுகின்றான். அவனையே உலகம் பாராட்டுகின்றது. வாழ்வும் வளமும் அவனிடம் உறவு கொள்கின்றன. செல்வம் வழி விசாரித்துக்கொண்டு அவனிடம் வந்து சேரும்.

**அருளாளர் முயற்சி:** மனிதர்கள் நலமடைய வேண்டுமென்று முயல்பவர்கள் தலைசிறந்தவர்கள். அவர்களின் முயற்சியினாலேயே உலகம் நலம் பெற்றுள்ளது. வாழ்வில் செம்மையும் சிறந்த பண்பும் மலர்ந்துள்ளன. புத்தபிரான், ஏசுநாதர்: நபிநாயகம், காந்தியடிகள் ஆகியோரின் தொண்டினாலும் முயற்சியினாலும் அன்றோ உலகில் அன்பும் சகோதரத்துவமும் மலர்ந்தன. .அவர்களின் முயற்சி உலக நலன் தழுவிய அருள் முயற்சியாகும்.

**பொருளாளர் முயற்சி:** பிறிதொரு முயற்சியில் எடுத்த காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்னும் அவாவையும், பிறர்க்கு நலன் விளைவிக்க வேண்டும் என்னும் செயலாக்கத்தையும், அதன் காரணமாக உண்டாகும் புகழையும் காண்கின்றோம். அவர்களுள் புகை வண்டியைக் கண்டுபிடித்த ஜார்ஜ் ஸ்டீவன்சனும், மின்சாரத்தைக் கண்டுபிடித்த எடிசனும், நோய் நீக்க மருந்துகள் கண்டுபிடித்த லூயி பாஸ்டியூரும் நம் கண் முன் காட்சியளிக்கின்றனர். வரலாற்றுப் புகழ் படைத்த நெப்போலியனும், மனிதப்பண்பினை உணர்த்திய ஆப்பிரகாம்லிங்கனும் சான்றாக விளங்குகின்றனர். வாழ்க்கை என்னும் போராட்டத்தில் வெற்றி காண வேண்டும் என்றால், முயற்சி என்னும் சிறந்த கருவி மிகவும் இன்றியமையாதது என்பதை அப்பெரியோர்கள் நமக்கு உணர்த்தியுள்ளனர்.

**மாணவர்களுக்கு முயற்சி இன்றியமையாதது.**

மாணவப் பருவம் கிடைத்தற்கரிய பருவம். இவ்வயதில் நல்ல செயல்களைச் செய்து முடிப்பதில் முன்பு சொல்லிய பெரியோர்களைப் போல் முசற்சியை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு முயன்றால் நம் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் ஒளிமயமாக இருக்கும். 'இவ்வளவு பெரிய செயலைச் சிறியவர்களாகிய நாம் செய்து முடிக்க முடியுமா?' என்று தளர்தல் கூடாது. சிறிய எறும்புகளும், தேனீக்களும், பறவைகளும் எத்தனை வியத்தகு செயல்களைச் செய்கின்றன? உறுதியான எண்ணமும் நம்பிக்கையும் முயற்சியும் உடையவராய்க் காரியத்தில் ஈடுபட்டால், செயலில் ஈடுபடும் முன்பே பாதி வெற்றியை அடைந்து விட்டோம் என்று கூறலாம். காரியத்தை முடிப்பதற்கான பெருமையை அம்முயற்சியே நமக்கு நல்கும்.

**முயற்சியும் வாழ்க்கையும்:** வாழ்க்கையை நடத்துவதற்கு முயற்சி வேண்டும். புகழ் பெறுவதற்கு அதனினும் சிறந்த முயற்சி வேண்டும். சிறிய வயதில் பேசவும் பாடவும் ஆடவும் ஓடவும் முயற்சி கொள்ளவில்லையா? மாணவப் பருவத்தில் பாடங்களைப் படிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவில்லையா? அதுபோலவே சிறந்த காரியங்களைக் குறிக்கோளுடன் செய்வதற்கும் முயற்சி மிகவும் தேவையாகும். வாழ்க்கையில் நிறைவு காண்பதற்கும் உபகாரம் செய்து வாழ்வதற்கும் முயற்சியே நல்ல பற்றுக் கோடாகும்.

**முயற்சி இன்மையால் விளையும் கேடுகள்:** முயற்சி இல்லாதவன் தனக்கும் தன்குடும்பத்திற்கும் நாட்டிற்கும் கேடாக அமைகின்றான். சிறந்த காரியங்களைச் செய்பவர்களே பெரியவர்கள். முயற்சி இல்லாதவர்கள் நற்காரியங்களைச்செய்து முடிக்கமாட்டார்கள். ஆதலின். அவர்கள் வாழ்வு பயனிலாத வாழ்வாக அமைந்துவிடும்; ஒளிவீசாத விளக்குப் போலவும் நீர் ஊறாத கிணறு போலவும் ஆகிவிடும்.

**அறிய வேண்டுவன:** முயற்சி செய்பவர்கள் ஊழையும் வெல்வர். ஊழ்வினையின் காரணமாக வினையை முடித்தல் அரிதாக இருப்பினும் மெய்வருத்தம் பாராது கண் துஞ்சாது பாடுபடுவாராயின் வெற்றி உறுதியாகக் கிடைக்கும். இக்கருத்துக்களை மனத்தில் பதித்து நாடும் மொழியும் முன்னேற வேண்டும் என்னும் நோக்கத்துடன் செயல்படுவோமானால் வெற்றி காண்பதும் அரிதாமோ?

**முடிவுரை:**

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" இக்குறளை வாழ்வில் மறக்காமல் முயற்சி செய்க! முயற்சி செய்க! வெற்றி அணங்கு விரைந்தோடி வந்து புகழ்மாலை சூட்டுவாள்.

## 11. நூல் நிலையங்களும் அவற்றின் பயன்களும்

**முன்னுரை:** நூல்நிலையங்கள் எல்லாம் அறிவுக் கோயில்கள். சிறந்த நூல்கள் யாவும் அறிவுத் திருவுருவங்கள். கலைநலமும் கவிநலமும் கமழ்கின்ற பொற்பேழைகள். வாழ்வுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குகள். ஆதலின், பெருமைமிகு நூல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்நிலையங்களையும் அவற்றின் பயன்களையும் இக்கட்டுரையில் காண்போம்.

**நூல்நிலையத்தின் இன்றியமையாமை:** அறிவு பெறுவதற்கு வழி யாது? நூல்களைக் கற்றலன்றோ? நூல்கள் அனைத்தும் நாமே வாங்குதல் இயலுமோ? அவற்றை வாங்குவதற்குப் பெருஞ்செல்வரே இடர்ப்படுவார் என்றால், பாமர மக்களின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? ஆதலின், பொருட்செலவு உண்டாகாமல் படிப்பதற்கும், மேன்மேலும் அறிவை வளர்த்துக்கொள்வதற்கும் நூல்நிலையங்கள் மிகவும் இன்றியமையாதனவாம்.

**பலவகை நூல்நிலையங்கள்:** மலர்களில் பலவண்ணங்களைக் காண்கிறோம். மணங்களில் பலவகைகள் இருத்தலை அறிகின்றோம். சுவைகளில் வேறுபாடுகள் இருப்பதையும் உணர்கின்றோம். அவைபோலவே நூல்நிலையங்களிலும் பலவகைகள் இருக்கின்றன. அவை பொது நூல்நிலையங்கள், தனியார் நூல்நிலையங்கள், பள்ளி நூல்நிலையங்கள், நகரும் நூல் நிலையங்கள் என்பன.

**நூல்நிலையங்களின் அமைப்பு:** நூல்நிலையங்கள் அழகும் அமைதியும் பொருந்திய சூழலில் அமைதல்

சிறப்பு. வெளிச்சமும் காற்றோட்டமும் படிப்போருக்கு மகிழ்ச்சியைத் தரும். படிப்போருக்கு வசதியாக இருக்கைகளை ஒழுங்காக அமைத்திருப்பது மிகவும் நல்லது. அடுக்கடுக்காகப் பல்வேறுவகை நூல்களைத் தொகுதி தொகுதியாக நூலகர் அடுக்கி வைத்திருக்கவேண்டும்.

**நூலகர் பொறுப்பு:** நூலகர் நூல்நிலையத்தின் பொறுப்பாளர். உறுப்பினர்களுக்கு வேண்டிய புத்தகங்களைக் கொடுத்தலும், அவர்கள் கொண்டுவந்து கொடுத்த புத்தகங்களை வாங்குதலும், ஆண்டுதோறும் நூலகத்துக்கு வேண்டிய புத்தகங்களை வாங்குதலும் நூலகரின் செயல்கள். சிறந்த ஆசிரியர்கள் எழுதிய நூல்களை அறிந்திருத்தலும், பொறுமை, இன்சொல், அறிவு, அடக்கம் ஆகிய பண்புகளை நூலகர் பெற்றிருத்தலுல் நூலகத்தின் வளர்ச்சிக்கும், தொண்டிற்கும் உறுதுணையாக அமையும்.

**மாணவரும் நூல்நிலையமும்:** தென்றல் காற்று நறுமணமும் குளிர்ச்சியும் பெற்று இயங்குதல் போன்று மாணவர்கள் இயங்குதல் வேண்டும். எங்கெங்கு கலைகள் உள்ளனவோ அங்கெல்லாம் சென்று அறிவுக் கலைகளைப் பெறுவதில் ஆர்வம் கொள்ளுதல் வேண்டும். நாள்தோறும் பள்ளி நூலகத்திற்குச் சென்று இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் பற்றிய கட்டுரைகளைப் படிக்க வேண்டும். அறிவும் மனப்பண்பும் அறிஞர்களின் நூல்களைப் பயில்வதின் மூலமே ஏற்படும். சிறந்த கருத்துக்களை, அழகிய கவிதைகளைக் குறிப்பேட்டில் பதிந்து கொள்ள வேண்டும்.

**நமது நோக்கம்:** ஊர்கள் தோறும் நூலகங்களை அமைப்பது நமது அரசின் நோக்கம். அரசின் விருப்பம்

நிறைவுபெற மக்கள் ஒத்துழைத்தால் வீதிகள் தோறும் நல்ல படிப்பகங்களையும் அமைக்க முடியும். நாம் குறிக்கோளுடன் செயல்பட்டால் வீடுகள் தோறும் நூலகங்களை ஏற்படுத்தலாம். நூல்களைக் கையில் வைத்திருப்பதையும் படிப்பதையும் நம் வாழ்க்கையின் நோக்கமாகக் கருதவேண்டும்.

**பயன்கள்:** நூல்கள் தரும் இன்பத்தை என்னென்று சொல்வது? வீணாகப் பொழுது போக்காமல் நல்ல முறையில் அறிவூட்டும் அறப்பணிகளை நூலகங்களைப் போல எவை செய்யமுடியும்? சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் கலைச்செல்வத்தை வாரி வழங்கும் அமுத சுரபிகள் அன்றோ நூல்நிலையங்கள். மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் ஏற்படும் ஐயங்களை அகற்றும் கலைக்கருவூலங்கள் அன்றோ நூலகங்கள். மக்கள் நல்ல முறையில் காலத்தைப் பயன்படுத்துவதற்கும், மனத்தைப் பண்படுத்துவதற்கும், செயலில் தூய்மையை வளர்ப்பதற்கும் நூலகங்கள் மிகச்சிறந்த முறையில் துணைசெய்கின்றன.

**முடிவுரை:** பண்டைக்காலம் முதல் நூலகங்கள் இருந்தன சங்கம் அமைத்துத் தமிழர்கள் நூல்களைப் போற்றியதும், நாளந்தா பல்கலைக்கழகத்தில் நூலகம் செயல்பட்டமையும், சரபோஜி மன்னர் நூல்களைப் பாதுகாத்தமையும் இக்கால நூலக வளர்ச்சியெனும் மாளிகையின் அடிப்படையெனலாம். எனவே, வாழையடி வாழையாக அறிவெனும் கொடி படர்வதற்கு நூலகமே கொழுகொம்பாக விளங்குகின்றது.

## 12. நான் விரும்பும் நூல்

**முன்னுரை:** ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுவையை விரும்புகின்றனர்; வேறுவேறு எண்ணங்களையும் செயல்களையும் கொண்டிருக்கின்றனர். அவரவர் மன இயல்புக்கு ஏற்பச் சில நூல்களை விரும்பிப் படிக்கின்றனர். நான் விரும்பிப் படிக்கின்ற சிறந்த நூல் திருக்குறளே ஆகும்.

**போற்றக் காரணம்:** திருக்குறள் உலகப் பொதுநூல். அறநூல். அறிஞர் பெருமக்களால் போற்றும் நூல். வாழ்க்கையின் பல்வேறு நிலையினர்க்கும் வழிகாட்டும் நூல். "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற" என்னும் குறள், "மனத்தில் குற்றம் இல்லாமல் இருப்பாயாக. அறம் என்பது அவ்வளவே ஆகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமாகும்". என்று தெளிவாகத் தெரிவிக்கின்றது. "அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் எனும் இவை நான்கினையும் நீக்கி ஒழுகுபவனே அறநெறியில் வாழ்வோன்" என்று மேலும் விளக்குகின்றது. ஆதலின், அறத்தை விளக்கும் நூலாக, அரசியலைத் தெரிவிக்கும் நூலாக, நன்மகனாக வழிகாட்டும் நூலாக விளங்குகின்றது. ஆதலின், யான் இந்நூலை விரும்பிப் பயில்கின்றேன்.

**நூலின் சிறப்பு:** திருக்குறள் தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய 'அ' கரத்தில் தொடங்கி, இறுதி எழுத்தாகிய 'ன'கரத்தில் முடிகின்றது. இந்நூலில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகள் உள்ளன. இரண்டு அடிகளில் சிறந்த கருத்துக்களை உவமை, உருவக அணிகளின் மூலம் விளக்குந்திறன் கற்போருக்குக் கழிபேருவகை அளிக்கும். எந்நூலுக்கும் அமையப் பெறாத பெருஞ்சிறப்பாக,

இந்நூலை அக்காலப் புலவர் பெருமக்கள் பாராட்டியதைத் திருவள்ளுவமாலையில் காணலாம்.

**திருக்குறள் தெரிவிக்கும் வாழ்க்கை:** வாழ்க்கை சிறக்க வழியாது? அன்பு என அறிவிக்கின்றது திருக்குறள். அன்பின் அடிப்படையிலே இல்லற வாழ்வு அமைய வேண்டும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என விளக்குகின்றது.. அன்போடு பொருந்திய தாய் அறத்தோடு தழுவியதாய் அமையின், அவ்வன்பே பண்பாகும். அவ்வறமே பயனுகும். இவ்விரு தன்மைகளும் உள்ள இல்லற வாழ்வே 'புகழ்வாழ்வு' என்றும், மங்கல வாழ்வு என்றும், இவ்வாழ்வுக்குத் துணை செய்யும், 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்றும் புலப்படுத்துவதை நோக்குக.

**திருக்குறள் தெரிவிக்கும் நல்லரசு:** இல்வாழ்க்கை இனிது நடைபெற நல்லாட்சி அமைதல் வேண்டும். புறநானூற்றுப் புலவர், "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று கூறுவதிலிருந்து, நல்ல அரசாங்கமே உலக வாழ்க்கையின் உயிர்நாடி என்பதை உணரலாம். ஆதலின், நல்லரசு யாது? "வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், யாவரிடத்தும் அன்பு காட்டுதலும், நீதி வழுவாது ஆட்சிசெலுத்துதலும், குடிமக்களைப்பாதுகாத்தலும் ஆகியவற்றை உரிமைச் செயல்களாகக் கருதிப் பணிபுரியும் அரசே நல்லரசு எனத் திருக்குறள் இலக்கணம் வகுக்கின்றது.

**திருக்குறள் உணர்த்தும் நாடு:** நல்லரசினுல் நடத்தப்படும் நாடு எத்தகைய இலக்கணங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்? கல்லும் முள்ளும் மரமும் மட்டையும் நாடாகுமா? அன்று அன்று. "குறையாத பயிர்விளைச்சலைச் செய்பவர்களும் அறநெறியில் நடப்பவர்களும் செல்வம் உடையோரும் ஒருங்கு வாழ்வதற்கு இடமாக இருப்பதே நாடு. மிக்க பசியும் நீங்காத நோயும் அழிவு செய்யும் பகைவர்களும் இன்றி நடப்பதே நாடு, குடிகள் பொருள்தேடி அலையாமல் அவர்களுக்கு எல்லா வளங்களையும் எளிதிற் கொடுப்பவையே நாடு" என்று திருக்குறள் கூறுகின்றது.

**திருக்குறளில் உள்ள சில உவமைகள்:** இன்சொல் லிருக்க வன்சொல் கூறுதல் கனியிருக்கக் காய் கவர்தல் போன்றதென்றும், சான்ருேர் அவையில் பேதை புகுதல் கழுவாத காலை இன்பந்தரும் படுக்கையிலே வைத்தாற் போன்றது என்றும், பொருட் பெண்டிரின் பொய்ம்மை பொருந்திய தழுவல் இருட்டறையிலே முன்பு அறியாத பிணத்தைத் தழுவியது போன்றது என்றும், சூதாடலில் வென்ற பொருள் இரையில் மறைந்த தூண்டிலை இரையெனக் கருதி மீன் விழுங்கியதை ஒக்கும் என்றும் உவமைகள் மூலம் பல்வேறு பொருள்களையும் நீதிகளையும் உணர்த்தியுள்ள நயம் எண்ணி எண்ணி இன்புறத் தக்கது.

**முடிவுரை:** திருக்குறளைக் கற்றலும் அதன் வழி நிற்றலும் பெற்றவரே நற்றவம் உற்றவர் ஆவார். ஆதலின் குறள் பேணின் அறம் வாழும். அனைத்துலகமும் வாழும்.

# 13. "கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் பயன்களும்"

**முன்னுரை:** "கூடிவாழ்ந்தால் கோடி நன்மை" என்னும் பழமொழி கூட்டுறவின் பெருமையை உணர்த்துகின்றது. கூடிவாழ்வதின் மூலமே மொழியும் பண்பாடும் வளர்ச்சி அடையும் என்பது அறிஞர் துணிபு. மனிதர்கள் வலிவும் பொலிவும் பெறக் கூடிச் செயல்படுதல் இன்றியமையாதது. சமுதாய மலர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் கூட்டுறவு வளர்ச்சியால் அரும்பிய மலர்களாகும்.

**தோற்றம்:** காகங்கள் கூட்டமாகப் பறப்பதைப் பார்க்கின்றோம். எறுப்புகள் வரிசையாக அணிவகுத்துச் செல்வதைக் காண்கின்றோம். ஒவ்வொரு இயற்கைப் பொருள்களின் வடிவங்களிலும் செயல்களிலும் கூட்டுறவு அமைந்திருப்பதை அறிகின்றோம். இவையெல்லாம் நமக்கு உணர்த்துவது என்ன? கூடிவாழ்ந்தால் வாழ்க்கை உண்டு என்பதை அன்றோ உணர்த்துகின்றன? இவ்வியற்கை நுட்பத்தைப் பலர் உணராமையால் அறியாமையிலும் வறுமையிலும் சிக்கினர். அவர்களின் வறுமையைப் போக்கவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் செர்மன் நாட்டறிஞர் இரப்பிசன் இவ்வியக்கத்தை உருவாக்கினர்.

**வேளாண்மையும் கூட்டுறவும்:**

"**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்**" என்றார் வள்ளுவர். அவர் கண்ட சமுதாயம் அமைய உழவர்கள் கூட்டுறவு முறையில் பாடுபட வேண்டும். துண்டு துண்டு நிலங்களையெல்லாம் ஒன்றுபடுத்தவும்,

பெரிய இயந்திரக் கலப்பைகள் இரசாயன உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் கூட்டுறவு முறையே சிறந்த முறையில் பயன்படுகின்றது. பொருளாதார உதவி வேண்டுமானாலும், தானியங்களை விற்க வசதிகள் பல வேண்டுமானாலும், இவைகளையெல்லாம் செய்ய வல்லவை கூட்டுறவுச் சங்கங்களேயாம்.

**கூட்டுறவுப் பண்டகசாலை:** வேளாண்மைத்துறையில் மட்டுமின்றிப் பிற துறைகளிலும் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் செயல்பட்டால் வெற்றி பெறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பண்டகசாலைகள் விளங்குகின்றன. பலரின் ஒத்துழைப்பைக் பெறவேண்டுமா? வாங்குவோர் விற்போர் ஒன்றுபட்ட மனத்தினராய் இருப்பதை அறிய வேண்டுமா? நல்ல பொருள்களை நயத்த விலைக்கு வாங்க வேண்டுமா? முடியும் என்பதற்குச் சான்றுகள் தாம் கூட்டுறவுப் பண்டகசாலைகள்.

**கூட்டுறவுப் பால்பண்ணை:** ஊர்கள் தோறும் கூட்டுறவுப் பால்பண்ணைகளை மக்கள் அமைக்கின்றனர். மாடுகள் வாங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பண உதவி போன்றவற்றைச் செய்கின்றன. அப்பணத்தைக் கொண்டு பலர் பால்மாடுகளை வாங்குகின்றனர். பாலைக் கூட்டுறவுச் சங்கத்தினர்க்கு அளித்து, அக்கடனைக் கழிக்கின்றனர். ஆதலின், பொருளாதார நலத்திற்கும், காலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கும் இச்சங்கங்கள் உதவுகின்றன என்பதில் ஐயம் இல்லை.

**எல்லாம் கூட்டுறவு:** கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல வலிவையும் பொலிவையும் மக்கட்குத் தரும் ஆற்றலைப் பெற்றுள்ளன. நெசவுத் தொழிற் கூடங்கள், பண்டகசாலைகள், குடியிருப்புக்கள், பல நோக்குக் கூட்டுறவுச்

சங்கங்கள் போன்றவை யெல்லாம் "கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதை விளக்கும் கொள்கை விளக்கங்களாக உள்ளன.

**கூட்டுறவினால் விளையும் பயன்கள்:** கூடி வாழ்ந்தால் கேடு நேருமோ? "கூடி விளையாடு பாப்பா" என்ற பாரதியார் பாடல் காட்டுகின்ற பொருள் யாது? தனி மரம் தோப்பாகுமா? இருகை தட்டினால் அல்லவா ஓசை எழும்? எனவே, பொருள் வளம் மிகவும், தொழில் வளம் சிறக்கவும், ஒருவருக்கொருவர் உபகாரம் செய்யயவும் கூட்டுறவு இயக்கங்கள் துணை செய்கின்றன.

**கேடுகள்:** நாட்டின் நலத்துக்கு ஆதாரமாக விளங்கும் கூட்டுறவு இயக்கங்களால் கேடுகள் நிகழாவா? கேடுகள் நிகழ்தலும் கூடும்! பாலுக்குக் காவலாகப் பூனையை வைப்பதுபோல் கெடுமதியாளர் சிலர் இவ்வியக்கங்களில் இடம் பெறுகின்றனர். அவர்களால் பொருள் பாழாகின்றது. இயக்கத்தின் நற்பெயர் கெடுகின்றது.

**முடிவுரை:** கூட்டுறவு இயக்கம் நம் நாட்டு உழவர்களுக்கு வாய்த்த நன்மருந்து. கைவினைஞர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. பெருளாதார மறுமலர்ச்சி ஏற்படுவதற்குத் துணைசெய்யும் புதுமைப் பூங்கா. ஆதலின், கூட்டுறவு இயக்கத்தைப் போற்றுவோம்.

## 14. "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

**முன்னுரை:** இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உலக ஒருமைப்பாடு அமைய வேண்டும் என்னும் எண்ணம் நம் பைந்தமிழ்ப் பாவலர் நெஞ்சத்தில் மலர்ந்தமையை, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் சொல்லோவியம் உணர்த்துகின்றது. தன்னலம் விடுத்துப் பொதுநலம் பேணவேண்டும் என்னும் உயரிய கருத்தினை இஃது நமக்கு அறிவிக்கின்றது.

**சிந்தனை:** சிந்தனை செயலின் அடிப்படை. சிந்தனை வளர்ச்சி பெற்றால் செயலில் வளர்ச்சி பெற முடியும். செயலும் சிந்தனையும் வளர்ச்சி பெறும்பொழுது மனிதர்களுக்கு நிறம், இனம், சமயம் முதலிய வேறுபாடுகளைக் கடந்து 'உலகவர்' என்ற எண்ணம் தோன்றும். இவ்வுலகம் நம் வீடு, இவ்வுலகிலுள்ளவர்கள் எல்லோரும் நம் உடன் பிறந்தவர்கள் என்ற கருத்துப் பிறக்கும். உலகம் அளாவிய அன்பு மலர்வதற்கு இவையே சிறந்த சாதனங்களாம்.

**இயற்கைக் கல்வி:** இருள் சூழ்கிறது. குடிசையைத் தங்குமிடமாக மனிதன் அமைத்துக் கொள்கின்றான். துயில்கின்றான். பின்பு கதிரவன் மெல்லக் கீழ்வானில் தோன்றியதும், விரிந்த வானத்தையும் பரந்த கடலையும், ஓங்கி உயர்ந்த மலைகளையும், பரவலான சமவெளிகளையும் காணுகின்றான். அப்பொழுது அவன் மனம் விரிவடைகின்றது. இங்ஙனம் இயற்கையை நோக்கும் பொழுதும், இயற்கைக் கல்வியைப் பயிலும் பொழுதும், இயற்கையில் இறைவனின் அருள் திறத்தை அறியும் பொழுதும் உலகம் அளாவிய அன்பு இயற்கையாகவே தோன்றுகின்றது.

**இலக்கியம்:** உலக ஒற்றுமையை உணர்த்தும் உயிர்க் கருத்துத்தான் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" இலக்கியம் உணர்த்த வேண்டிய உயர்ந்த பண்பாடும் இதுவேயாம். "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு" என்ற குறளில் கணியன் பூங்குன்றனார் கண்ட பண்பாட்டு நிலை இடம் பெறுவதைக் காணலாம். "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற மொழி வேற்றுமையுள் ஒற்றுமை காணும் சிறந்த விளக்கமாகும்.

தமிழ் இலக்கிய ஆசிரியர்களில் பெரும்பாலோர் உலகம் அளாவிய அன்பு வாழ்வு அமைய வேண்டும் என்னும் நோக்கினர். திருவள்ளுவர் தம் நூலின் முதற் குறளில் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்றும், சேக்கிழார், உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" என்றும், கம்பர், "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்றும் கூறியிருப்பதிலிருந்து நன்கு புலனும்.

**வளர்ச்சி:** வாழ்வு மனிதனைப் பண்படுத்துகின்றது. இளமையில் தனக்கென்று வாழுகின்றான். இளமையும் எழிலும் நிறைந்த நங்கையுடன் வாழும் பொழுது தன்னை மறந்து அவளுக்காக வாழுகின்றான். குழந்தை பிறந்ததும் அன்பு அதனினும் விரிவடைகின்றது. விருந்தோம்புதல், உறவினர்களைப் பேணுதல், ஒப்புரவறிதல் போன்ற கடமைகளை மேற்கொள்ளும்போது அன்பின் தன்மையிலே பெரிய வளர்ச்சியைக் காணுகின்றோம். இவ்விதம் மெல்ல மெல்லத் தன்னலம் கரைந்து பொதுநலம் மிகுந்து உலகவனாய் வாழும் மனநிலை பெறுகின்றான்.

மூவகையுள்ளம்: தன் மனைவி வீடு வாசல் சோறு என்று வாழ்பவன் மனமோ கடுகு போன்று சிறியது. தன் ஊர் அளவில் அன்பு காட்டுபவன் மனமோ சிறிய கடுகைக் காட்டிலும் கொஞ்சம் பெரிய துவரை போன்றது. தன்னாட்டளவில் அன்புகொண்டு, பிற நாடுகள் மீது பகைமை கொள்பவன் மனமோ அதனினும் பெரிய தேங்காய் போன்றது. ஆனால் உலகிலுள்ள மக்களெல்லாம் 'ஒன்று' என்று எண்ணுகின்ற உள்ளந்தான் தாயுள்ளம். அஃதே தன்னலம் நீங்கிய இன்ப உள்ளம். இவ்வுள்ளமே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கருதும் கவிதை உள்ளம்.

முடிவுரை: உலகில் ஒருபகுதி வறுமையுற்றாலும் உலகமாம் அன்னை வருந்துவாள். உலகில் எல்லோர்க்கும் இன்பம், நல்வாழ்வு, செல்வம் கிடைத்தால் உலகமாம் அன்னை இன்புறுவாள் இந்நோக்கம் நிறைவு பெறவே ஐ. நா மன்றம் பாடுபடுகின்றது மக்கள் அனைவரும் ஒத்துழைத்தால் பூங்குன்றனர் கண்ட அருளுலகம் மலரும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

## 15. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

முன்னுரை: ஒற்றுமையோடு கூடிய உயிரினங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி அடையும். ஒற்றுமையில்லாத உயிரினங்கள் எவ்வளவு வலிமை உடையனவாய் இருந்தாலும், அவை வாழ்க்கைப் போரில் தோல்வி அடையும். இவ்வுண்மையை உயிரினங்கள் பற்றிய உண்மையை ஆய்வோர் உணர்வர். வாழ்க்கைப் போரில் வெற்றிகாண விரும்புவோர் ஒற்றுமையைப் பேணுவாராயின், செயற்கரியவற்றைச் செய்து பெரும்புகழ் அடைவார்.

**ஒற்றுமை உண்டாக வழி:-** ஒற்றுமை என்னும் எழில் மாளிகையை அன்பு என்னும் அடிப்படை அமைத்தும், ஒருவருக்கொருவர் உதவுதல் என்னும் செஞ்சாந்திட்டும், செவ்விய சிந்தனையென்னும் செங்கற்களை அடுக்கியும் எழுப்ப வேண்டும் அப்பொழுதுதான் ஒற்றுமை உருவாகும். மற்றும் பிறர் குற்றங்களை மன்னித்தல், கோபங்கொள்ளாமல் பொறுமையுடன் வாழ்தல் ஆகியவை அம்மாளிகையில் ஒளிவீசவல்ல ஒற்றுமை என்னும் சுடர்விளக்கின் உறுப்புக்களாகும்.

**ஒற்றுமை விளக்கு:-** ஒற்றுமை வாழ்வு என்னும் விளக்கு ஒளிவீச வேண்டுமானால், அன்பு என்னும் எண்ணெய் வேண்டும். அறம் என்னும் திரி வேண்டும். அளவோடு செயல்படுதல் என்னும் காற்று வேண்டும். அப்பொழுது வாழ்வாம் விளக்கு ஒளி வீசுவதைக் காண முடியும். எனவே, வாழ்க்கையாகிய விளக்கு ஒளிவீச வேண்டுமானால், கணவனும் மனைவியும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

**ஒற்றுமையின் பயன்கள்:-** இல்வாழ்வின் ஒற்றுமையே ஊரின் ஒற்றுமையாய் நாட்டின் ஒற்றுமையாய் உலகின் ஒற்றுமையாய் வளர்ச்சி அடையும். அவ் வளர்ச்சியிலே கல்வியின் மாண்பைக் காணலாம்; கலையின் நலத்தைக் காணலாம்; செல்வத்தின் செழிப்பைக் காணலாம்; இன்பத்தின் எழிலைக் காணலாம்; வீரத்தின் பொலிவைக் காணலாம்; வெற்றியின் விளைவைக் காணலாம்.

**ஒற்றுமையின் வலிமை:-** சின்னஞ்சிறு மழைத்துளிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் பொங்கிவரும் பெரிய ஆறு உருவாகிறது. மெல்லிய மயிலிறகுகளை எல்லாம்

மொத்தமாக வண்டியில் மேலும் மேலும் ஏற்றினல் அவை வலிய வண்டியின் இரும்பு அச்சையும் முறிக் கின்றது. சின்னஞ்சிறு மீன்கள் எல்லாம் ஒன்று சேரக் குவிந்தால் பெரிய கப்பலேயே தடுத்து நிறுத்தி விடுகின் றன. ஆதலின், ஒற்றுமையின் வலிமையை ஏளனமாகக் கருதாதீர். அஃது மாபெரும் ஆற்றலே உடையது. ஏழை கள் எல்லாம் ஒன்றுபட்டு எதிர்த்த பொழுது கொடுங் கோல் மன்னர்களின் ஆட்சி அமைப்புக்கள் அழிந்தன வன்றே?

**ஒற்றுமையின்மையால் விளையும் கேடுகள்:-** ஒற்றுமை யின்மையால் விளைந்த கேடுகள் மிகப்பலவாகும். பண் டைத் தமிழ் மன்னர்கள் அழிந்ததற்குக் காரணம் யாது? ஒற்றுமை இன்மையால் அல்லவா? மாபெரும் இந்தியா சிறிய பிரிட்டனிடம் சிக்கியதற்கு இதுவன்றே கார ணம். தொழில் வளமும் பொருள் வளமும் ஏன் நசுங் கின? ஒற்றுமையோடு உழைக்கும் மனப்பான்மை இல்லே. ஒற்றுமையோடு பாடுபடும் செயல்திறன் இல்லே. எனவே, துன்பம் மிகுந்தது. இன்பம் குறைந்தது.

**முடிவுரை:-** "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்னும் பாரதி பாடல் நமக்கு ஒற்றுமையின் சிறப்பை உணர்த் தும் காவியமாகத் திகழ்கின்றது. ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என்ற உயரிய குறிக்கோள் உலக ஒற்றுமை யைக் கட்டிக் காக்கும் திருமந்திரமாய் நிலவுகின்றது, வான்புகழ் வள்ளுவர் வழங்கிய திருக்குறள் ஒற்று மையை வளர்க்கும் தாயுள்ளமாய்த் தொண்டுபுரிகின் றது.

வாழ்க உலக ஒற்றுமை!

# 16. தமிழர் நாகரிகம்

**முன்னுரை:**

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" என்று திருவள்ளுவர் நாகரிகத்துக்கு விளக்கம் தருகிறார். நாகரிகம் என்றால் கண்ணோட்டம் என்றும், அஃதே உயிரின் அழகாகும் என்றும் பரிமேலழகர் விளக்கியுள்ளார். எனவே, அகவுணர்வுத் தூய்மையையும், புறக்காட்சியின் தோற்றத்தையும், முன்னேற்றம் பொருந்திய வாழ்வுத் துறைகளின் மொத்த அமைப்பையுமே நாகரிகம் என்று கூறுதல் ஒருவகையில் பொருந்தும்.

**அரசு:-** தமிழர், "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று அரசியலைப் போற்றினர். ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தினரும் அரசனுக்கு இன்றியமையாத ஆலோசனைகள் கூறினர்; ஆட்சியைக் கவனித்தனர். அரசன் குடிமக்களைக் கண்ணும் கருத்துமாகப் பேணினான். உழவு, தொழில், வாணிகம் ஆகியவற்றைப் போற்றினான். மன்னனும் மக்களும் தமிழைக் கற்று மகிழ்வுடன் வாழ்ந்தனர். தமிழ் தமிழகத்தை ஆண்டது.

**போரும் வாழ்வும்:-** பண்டைத் தமிழர் வீரத்தையும் காதலையும் இருகண்களாகப் பேணினர். போர் செய்தலை வாழ்வுக் கலையாகக் கருதினர். போர்த்துறை பற்றியும் அகத்துறை பற்றியும், புறப்பொருள் என்றும் அகப்பொருள் என்றும் இலக்கணங் கண்டனர். "களிறறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்" என்று ஆண்மகனின்

கடமையை வலியுறுத்தினர். தமிழர்கள் போரில் பெரு விருப்பமுடையவர் என்பதைக் கலிங்கத்துப் பரணியி லுள்ள செஞ்சொற் பாமாலைகள் தெரிவிக்கின்றன.

**கல்வி:-** தமிழ் மக்களின் அகவாழ்வும் புறவாழ்வும் அவர்களின் சிறந்த நாகரிக வாழ்வை உணர்த்த வல் லவை. அகவாழ்வும் புறவாழ்வும் சிறப்படையக் கல்வி வேண்டுமே? அக்கல்வியை யாண்டுச் சென்று கற்ற னர்? எம்மொழியில் கற்றனர்? தாய்மொழியில் அன்றோ கற்றனர்! தாய்மொழிக் கல்வியே இயற்கைக் கல்வியாம். ஆதலின், சிறந்த அறிவும் உயர்ந்த கற்பனையும் நல்ல வாழ்க்கையும் அமைய, அக்கல்வி காரணமாய் அமைந்தது.

**தொழில்:-** தமிழ்நாட்டினர் கவின்மிகு தொழிலில் சிறப்புற்று விளங்கினர். பஞ்சினும் பட்டினும் மெல்லிய ஆடைகளை நெய்தனர். கொல்லு வேலையிலும் தச்சு வேலையிலும் சிறந்திருந்தனர். சாயம் தோய்த்தல், ஓவி யம் வரைதல், கண்ணாடிப் பொருள்கள் செய்தல் ஆகி யவற்றில் தேர்ந்திருந்தனர். எல்லாத் தொழில்களையும் போற்றினர். எனவே, பண்டைத் தமிழர்கள் பெருமித வாழ்வு வாழ்ந்தார்கள்.

**கலை:-** வளமார் தமிழகத்தில், வானளாவிய கோபு ரங்களைக் காணுகின்றோம். வற்றாத தெப்பக்குளங்களைப் பார்க்கின்றோம். கோபுரங்களில் தாம் எத்தனை விதமான ஓவியங்கள்! சிற்பங்கள்! சிந்தனையைக் கவரும் கற்பனை கள்! அவற்றைப் படைத்த கலைஞர்கள் எல்லாம் வழி வழி நாகரிகம் பேணும் நல்லவர்களன்றோ! அவர்களின் ஒவ்வொரு படைப்பிலும் அமைப்பிலும் தமிழ்மக்களின் விழுமிய நாகரிகச் சின்னங்களை அல்லவா தெரிந்து கொள்கின்றோம்!

**இலக்கியம்:-** நாகரிகத்தின் அளவு கோலாக விளங்குவன இலக்கியங்கள். நம் தமிழ் இலக்கியங்களில் வாழ்வின் நோக்கத்தைத் தெளிவாகக் காணலாம். பிறருக்காக வாழவேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோளை மெல்ல மெல்ல, ஆனுல் உறுதியாக இலக்கிய ஆசிரியர் உணர்த்துவதை அறியலாம். திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற நூல்களெல்லாம் தமிழர் நாகரிகத்தை உணர்த்தும் இலக்கியச் செல்வங்களாம்.

**முடிவுரை:** நீதியைக் காப்பதற்காக உயிர்துறந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாற்ருல் பழந்தமிழ் அரசியல் நாகரிகத்தை அறியலாம். இமயத்தில் புலி பொறித்த கரிகாலன் வரலாற்ருல் தமிழர் போர்த்திறத்தை அறியலாம். அருந்தமிழ் அவ்வையின் பெருந்தமிழ்த் தொண்டால் கல்விச் சிறப்பைக் காணலாம். திருவள்ளுவரைப்பெற்ற பெருஞ்சிறப்பால், உலக நாகரிகத்தின் தாய்மைநாடே தமிழகம் என்று தலைநிமிர்ந்து கூறலாம்.

## 17. தமிழர் பண்பாடு

**முன்னுரை:-** "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" எனருர் கலித்தொகை ஆசிரியர். "பண்புடையார் பட்டுண் டுலகம் அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்" என்ருர் திருவள்ளுவர். "உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத் தாமே தமியர் உண்டலும் இலரே" என்ற பாடலில் பண்புடையார் இலக்கணத்தை வரைந்துள்ளார். கடலுண் மாய்ந்த இளம்பெரும்வழுதி. இங்ஙனம் நம்முன்

ஞோர்களால் போற்றப்பட்ட பண்பாட்டை அறிந்து, அப்பண் பாட்டைப் போற்றி, அதன்படி வாழ்வதன்றே நமக்குப் பெருமை அளிக்கும்,

**பண்பாட்டை அறிய வழி:-** தமிழர் பண்பாட்டை அறிய வேண்டுமானுல், அவர்கள் வாழ்க்கையை அறிய வேண்டும். அரசியலேயும் போர்முறைகளேயும் அறிய வேண்டும். அவற்றை அறிதற்குக் கருவிகளாக இருப் பவை இலக்கியங்களேயாகும்,

**வாழ்வு:-** திருக்குறளேத் தமிழ்ப்பண்பாட்டின் விழு மிய நிலேயை விளக்கும் ஓவியம் என்று கூறலாம். இல்ல றத்தின் சிறப்பைக் கூறவந்த வள்ளுவர் "அன்பும் அற னும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்ருர். இங்கு இல்லற வாழ்வின் பண்பாக அன் பையும் அறத்தையும் காட்டுகின்ருர். இதனுல் அன்பா லும் அறத்தாலுமே இல்லறம் பண்டும்; பயன்படும்; வாழ்வாங்கு வாழும் வளம்பெறும் என்று பொருள்நயம் தோன்றுவதை உன்னுக.

**விருந்தோம்பல்:-** இல்லற வாழ்வின் உயர்ந்த குறிக் கோளாக விருந்தோம்புதலேப் பழந்தமிழர் கருதினர். "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்று வாழ்ந்தனர். கண்ணகி தன் குறையாகக் குறிப்பிடும் பொழுது, "விருந்தெதிர் கோடலும் இழந்த என்னே" என்று கூறு கின்ருள். சீதை அசோகவனத்தில் இருந்த பொழுது இராமபிரானே நினேத்து வருந்துகின்ருள். அதனே "விருந்து கண்டபோ தென்னுறுமோ வென்று விம்மும்" என்று கம்பர் குறிப்பிடுகின்ருர், அகநானூறு, நற்றிணே ஆகிய நூல்களில் எல்லாம் விருந்தோம்பும் பண்பு பல

வாறு போற்றப்படுவதை அறியலாம்.

**பண்புடையாளர் பெருமை:-**

ஒருவர் இனிய சொற்களைப் பேசினால் அவரை இன்சொல்லார் என்று கூறுகின்றோம். பிறர்க்கு ஒருவர் உதவி செய்தால் அவரைப் பரோபகாரி என்று புகழுகின்றோம் தராசுக் கோல் போல நடுவுநிலைமையுடன் வாழ்கின்றவரை நீதிமான் என்று வாழ்த்துகின்றோம். ஐம்புலன்களையும் அடக்கி ஒழுக்கமுடன் வாழ்கின்றவர்களை ஒழுக்கமுடையார் என்று சிறப்பிக்கின்றோம். இவையனைத்தும் அமையப்பெற்றவர்களை அன்றோ பண்புடையாளர் என்று கூறுகின்றோம்.

**இலக்கியம் போற்றும் பண்பு:-** காதல் வாழ்விலே தமிழ்ப்பண்பு தனிப்பண்பாக விளங்குகின்றது. பிரிந்து சென்ற தன் மகளைக் காணச் செவிலித்தாய் ஒருத்தி காட்டின் வழியே வருகின்றாள். அவள் தன் மகளை நோக்கி நோக்கிக் கண்கள் பூத்துவிட்டன. அந்நிலையில் ஒரு நங்கையும் ஓராடவனும் வருவதைப் பார்த்து, "நம்பியே! உன்னைப்போல ஓர் ஆடவனும் இளம்வயதுடைய ஒரு நங்கையும் சென்றதைக் கண்டனையோ?" என்றுகேட்டாள். அதற்கு அவன், "அம்மையே! என் போன்றான் செல்வதைக் கண்டேன். பிறிதொன்றும் அறியேன். அந்நங்கை நல்லாள் பற்றி இம்மங்கையிடம் கேள்" என்றான் இச்செய்தியின் மூலம் தனக்குரியாளைத் தவிரப் பிற நங்கையை ஆடவர்கள் பார்க்கும் மனவியல்பினர் அல்லர் என்பது புலனாகின்றது.

**மானம்:-** தமிழர் மானத்தை உயிரினும் சிறந்ததாகப் போற்றினர். "மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்னும் கூற்றுக்கு இலக்கணமாக

விளங்கினர். திருக்குறள் மானமுடையாரின் சிறப்பினை "இளிவரின் வாழாத மானமுடையார் ஒளிதொழு தேத்தும் உலகு" என்று புகழ்கின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய சேரமான் கணைக்கால் இரும்பொறையின் வரலாற்றை அறியாதார் யாரோ?

**முடிவுரை:-** கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் பண்பு. அப்பண்பினை வீரத்தின் வீரம் என்றும், மானத்தின் மாண்பு மிகுமானம் என்றும், கொடைத் தன்மையிலும் சிறந்த கொடைத்தன்மை என்றும் அறிஞர் பாராட்டுவர். நம் வான்புகழ் வள்ளுவர்,

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

என்று கூறிய தன்மையை நோக்கின் இதன் சிறப்பு நன்கு புலனாகும்.

## 18. தமிழ் இலக்கிய மாண்பு

**முன்னுரை:-** தமிழ் இலக்கியங்களில் மிகச் சிறப்புடைய நூல்களை ஆராய்ந்து படித்தால், தமிழ் இலக்கியங்களின் மாண்புகள் இனிது புலனாகும். அறிவையும் உணர்ச்சியையும் மையமாகக் கொண்டு புனைந்திருக்கும் அழகிய கவிதைகள் தமிழில் நிரம்ப உண்டு. கற்பனைகளையும் கலைக்கருவூலங்களையும் அழகு பொருந்த அமைத்து வாழ்க்கைப் படம் பிடித்துக் காட்டும் காவிய ஓவியங்களும் தமிழில் மிகுதியாக உண்டு. அவையெல்லாம் இன்பத்துள் இன்பம் பயக்கும் இலக்கியச் செல்வங்களாம்.

**இலக்கியங்கள்:-** பண்டைத் தமிழ்ப்புலவர்கள் வாழும் இலக்கியங்களை, வாழ வழிகாட்டும் இலக்கியங்களைப் படைத்தனர். ''சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த இருவினைக்கும் மாமருந்து'' என்று போற்றப்படும் திருக்குறளையும், ''நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்'' என்று கொண்டாடப்படும் சிலப்பதிகாரத்தையும், கற்றோர்க்கு இன்பம் பயக்கும் கம்பராமாயணத்தையும், சீவக சிந்தாமணி, பெரியபுராணம் போன்ற நூல்களையும் சிறந்த இலக்கியங்கள் என்பர். அவற்றைப் பயில்கின்றவர்கள் அன்றோ இலக்கிய இன்பம் துய்க்கின்றவர்கள் ஆவார்கள்.

**வள்ளுவர் காட்டும் சுவை இன்பம்:-** சுவையிற் சிறந்தது இன்சுவை. இன்சுவை உணவுகளிலேயே இனிய சுவையுடையது அமிழ்தம். அவ்வமிழ்தத்தைக் காட்டிலும் இனிய சுவையுடையது எது? அதுவே, ''தம்மக்கள் தமது சிறுகைகளாலே பிசைந்த கூழ் உணவு'' என்று வள்ளுவர் கூறுகின்றார்.

**ஒலியின்பம்:-** இங்குச் சுவை உணவிற் சிறந்ததைக் கண்டோம். மேலும் வள்ளுவர் உணர்த்தும் இன்பத்தைக் காண்போம்.

இன்பம் பயக்கும் ஒலி யாது? குழலின் ஒலியா? யாழின் ஒலியா? சிலர் குழலின் ஒலியை இனியது என்கின்றனர். சிலர் யாழின் ஒலியை இனியது என்கின்றனர். இங்ஙனம் கூறும் இருபிரிவினர்க்கும் விடையளிக்கும் விதமாக, ''இவ்விரு ஒலிகளிலும் இன்பம் பயக்கும் ஒலி தம் குழந்தைகளின் மழலைமொழி'' என்று கூறியதும் அவர்கள் அமைதியுற்றனர்.

**ஊற்றின்பம்:-** வரன்புகழ் வள்ளுவரை நோக்கி, "பெருந்தகையோரே! சுவை உணவிற் சிறந்ததைச் சொன்னீர்! இன்னொலியிற் சிறந்ததை இயம்பினீர்! தொடுவுணர்வு இன்பத்தையும் ஒலியுணர்வு இன்பத்தையும் தந்து மகிழ்விக்கும் ஆற்றல் குழந்தைக்கு உண்டோ? என்றனர். அவர் அதற்கு விடை பகர்தல் போன்று, "தம் மக்களின் மெய்யைத் தீண்டுதல் உடலுக்கு இன்பம். அக்குழந்தைகளுடைய சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம்." என்று கூறுவதை நோக்குக.

146720

**அறிவின்பம்:-** தனக்கு மட்டும் இன்பம் கிடைத்தால் போதுமா? அவ்வாறாயின், அஃது தன்னலத்தின்பாற் படாதோ? பிறர்க்கும் அல்லவா இன்பம் பயக்க வேண்டும்! "அங்ஙனம் இன்பம் பயக்கும் ஆற்றல் குழந்தைக்கு உண்டோ?" என்றால், 'உண்டு' என்கின்றார். இதோ!

"தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" என்று அறிவின்பத்தை உணர்த்துகின்றார்.

இவ்வதிகாரப் பாடல்களின் பொருள்களை நோக்கின், முதலில் சுவையின்பத்தையும், அடுத்துத் தொடுவுணர்வு இன்பத்தையும்,சொல்லின்பத்தையும், பின்னர் ஒலி இன்பத்தையும், இறுதியாக அறிவின்பத்தையும் அறிவிக்கும் திறம் எண்ணி இன்புறத்தக்கதாகும்.

**கம்பர் காட்டும் தேன் ஆறு:-** செல்வ வளம் மிக்க நாடு கோசலம். அங்குப் பண்ணைப் பாடுதற்குரிய பாணர்கள் இனியகள்ளைக் குடிக்கின்றனர். மத்தளவோசையும் யாழ் ஓசையும் ஒத்து ஒலிக்க இனிய பாடல்

TB
031(?)
N57

களைப் பாடுகின்றனர். இனிய இசைப்பாடல் எழில்மிகு இளநங்கையரின் இன்துயிலை நீக்குகிறது. அவ்வள நாட்டிலே ஆறுபாய்கின்றது. அந்த ஆறு வெறும்நீர் பாயும் ஆறு? அன்று, தேனாறு என்று கவிஞர் காட்டு கின்றார். இதோ! கவிதை,

"ஆலைவாய்க் கரும்பின் தேனும்
அரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய்க் கனியின் தேனும்
தொடையிழி இறாலின் தேனும்
மாலைவாய் உகுத்த தேனும்
வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப உண்டு
மீனெலாம் களிக்கு மாதோ!"

இப்பாடலே ஒரு தேனாறு. இங்குத் தேனாற்றையும், தேனாறு கலந்த தேன்கடலையும், அந்தத்துள்ளி மகிழும் மீன்களையும் காண்கின்றோம்.

**முடிவுரை:-** இலக்கியங்கள் நமக்கு எல்லையில்லா இன்பங்களை வழங்குகின்றன. உணர்ச்சியையும் அறிவையும் தூண்டுவதில் இலக்கியங்கள் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. ஆதலின், இலக்கியங்களைப் போற்றி வாழ்வோம். புதிய இலக்கியங்களைப் படைத்துப் பெருமிதம் அடைவோம்.

# 19. காடுகளும் அவற்றின் பயன்களும்

**முன்னுரை:** காடுகள் என்றவுடன் நம் கண்முன் காட்சியளிப்பன யாவை? ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்கள்; ஓடிக்கொண்டே இருக்கும் சிற்றாறுகள்; பசுமை மிகுந்திருக்கும் புற்கள்; பற்பலவகை மிருகங்கள்; பூத்துக் குலுங்கும் எழில் மலர்கள்; விந்தை விந்தையான செடி கொடிகள்; ஆம், இவையெல்லாம் தோன்றுகின்றன. அழகும் அமைதியும் கொலுவீற்றிருக்கும் காட்சிகளைக் காடுகள் தாம் வழங்குகின்றன. அக்காடுகளைப் பற்றி அறிவதும் இன்பம்! அவற்றின் பயன்களைக் கூறுவதும் இன்பம்!

**வினாவும் விடையும்:-** காடுகளை ஏன் காக்கவேண்டும்? எங்ஙனம் காக்வேண்டும்? காப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை? காட்டுவளம் பேணாமையால் ஏற்படும் கேடுகள் யாவை? என்னும் வினாக்களை எழுப்புக. விடை வரும். மனத்தில் தெளிவுண்டாகும். இயற்கை அழகையும் அறிவையும் பெறலாம்.

**காப்பதின் அவசியம்:-** காடுகளை காக்கவேண்டியதின் அவசியத்தை அறியவேண்டுமல்லவா? அப்படியாயின், காடுகளுக்குப் போய்ப் பார்க்கவேண்டும். அங்கு வானளாவிய மரங்கள் மேகங்களை வேண்டுவதையும், மேகங்கள் தாய்மை அன்பால் தம்சேய்களாகிய மரங்களுக்கும், செடிகொடிகளுக்கும் அமிழ்தமாகிய மழையைப் பொழிவதையும் கண்குளிரக் காணுகின்றோம். அம்மழை பொழிவதற்குக் காரணம் காடுகளன்றோ! மழையின்றி மானிலத்தார்க்கு வாழ்வும் உண்டோ? மாமழை பெய்ய மரங்களையுடைய காடுகள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

**காடுகளைக் காத்தல்:-** மழை பொழிவதற்கு ஆதாரமாக விளங்கும் காடுகளை, இயற்கை அழகைப் பேணிக் காக்கும் காடுகளை, மக்கள் தம் அறியாமையாலும் பொருளாசையாலும் அழித்தனர். அங்கு இயல்பாக உறையும் விலங்குகளையும் பிற உயிரினங்களையும் கொன்றனர். அவற்றால் இயற்கை அழகு குறைந்தது மழைவளம் குறைந்தது. மக்களின் வாழ்க்கைவளம் தேய்ந்தது. எனவே,காடுகளைக் காக்கவேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது. காடுகளைப் பேணத் தனித்துறையை அரசு ஏற்படுத்தியது. அதன்பயனாகக் காடுகள் வளம் பெற்றன.

**காப்பது கடமை:-** காடுகளால் நாம் அடையும் பயன்கள் அளவிறந்தன. அடுப்பெரிக்கும் விறகுமுதல் அழகூட்டும் மரச்சாமான்கள் வரை அனைத்தும் காட்டிலுள்ள மரங்களினால் அல்லவா கிடைக்கின்றன. நாட்டின் பொருளாதார வாழ்வுக்கு அவசியமான சந்தனம், மூங்கில், தேக்கு போன்ற மரங்களையும், செயற்கைத் துணிகள், தாள்கள் முதலியவை செய்வதற்கு உதவும் மரங்களையும் காடுகளன்றோ தருகின்றன! ஆதலின், காடுகளைக் காப்பது கடமையாகும்.

**முல்லை நிலத்தின் சிறப்பு:-** பண்டைநாளில் காடுகளை முல்லை நிலம் என்றனர்; அந்நிலத்தினர் திருமாலை வணங்கினர். அவர்களை இடையர்கள் என்றனர்; அவர்கள் ஆடுமாடுகளை மேய்த்தனர்; இல்லறமாம் நல்லறத்தைப்பேணினர்; எழில்மிக்க முல்லைமலரை விரும்பினர்; சூடினர்; கான்யாறுகளில் நீராடினர்; நல்ல மரங்களிலுள்ள கனிகளை உண்டனர். இன்பவாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்கினர். அவர்களின் முயற்சியாலும் உழைப்பாலுமே நாடுகளும் நகரங்களும் உண்டாயின. வாழ்வும் வளமும் பெருகின.

**இயற்கை இன்பம்:-** முல்லை நிலத்திலே மாலை நேரங்களில் நாம் காணுவதென்ன? யானைகள் மலையடிவாரத்தை நோக்கிச் செல்லும் காட்சியிலே தாம் எவ்வளவு அழகு தோன்றுகின்றது! பறவைகள் எல்லாம் பறந்து கூடுகளை நோக்கிச் செல்லும்போது எழுப்பும் ஒலிகளில் தாம் எத்தனை விதங்கள்! அந்திநேர மலர்களில் தாம் எத்தனை வண்ணங்கள்! கன்றினை நாடி வரும் கறவைப் பசுக்களின் விரைவிலே தாம் எத்தனை அழகுகள்! இவ்வந்திக் காட்சியிலேயே மனதைப் பறிகொடுக்காத மாந்தரும் உளரோ?

வீட்டில் உறைகின்றபோது அடைகின்ற அனுபத்தினும், காட்டில் அடைகின்ற அனுபவ இன்பத்தையே பண்டைநாள்முதல் மாந்தர் போற்றினர். இராமபிரான் காட்டில் வாழ்ந்ததை மறப்பவர் யாரே? பாண்டவர்கள் காட்டில் வாழ்ந்த கதையை இன்னும் பேசுகின்றனரே! காடுகள் அல்லவா இயற்கையின் இன்ப ஏடுகளாக விளங்குகின்றன!

**முடிவுரை:-** காடுகளை வளப்படுத்த மக்கள் முயலுதல் வேண்டும். அரசினரும் பல்வேறு விதமான மரங்களையும், மருந்துச் செடிகளையும் வளர்க்கத் துணைசெய்ய வேண்டும். கடற்கரை ஓரங்களில் பொருள்வருவாய்க்கு உகந்த தென்னை, பனை போன்ற மரங்களை மிகுதியாக வளர்ப்பது நாட்டின் நலனுக்கு உகந்ததாகும். எனவே, "காட்டு வளம் பேணுவோம் நாட்டு நலம் நாடுவோம்" என்பதை மனத்திற் கொண்டு பணிபுரிவோமாக!

# 20. வானொலியின் நன்மைகள்

**முகவுரை:-**

"காசி நகர்ப் புறத்துப் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர்கருவி செய்வோம்"

என்றார் அன்று அமரகவி பாரதியார். அவர் கூற்று இன்று பலித்துவிட்டது. அறிவியல் அறிஞர்களின் அறிய உழைப்பால் மனித சமுதாயம் அடைந்த நன்மைகள் பலப்பல. அவற்றில் மின்ஆற்றல் தரும் பயனோ எண்ணிலடங்கா. அதன் துணையால் இயங்கும் வியத்தகு விந்தைகள் சில. அவற்றுள் வானொலியும் ஒன்றாகும். வானொலியால் நாம் பெறும் நன்மைகளை இக்கட்டுரையில் காண்போம்.

**வானொலி வந்த வரலாறு:-** வானத்தில் ஈதர் என்னும் பொருள் நிறைந்திருக்கிறது நாம் பேசும் ஒலி காற்றில் அலைகளாகப் பரவுகிறது. நாம் பேசும் ஒலி காற்றில் சிறிது தூரம் சென்றபின் அழிந்து போகின்றன. அவற்றை மின் காந்த அலைகளாக மாற்றினால் அழிவதில்லை. அவை வினாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் பரவுகின்றன. வானொலி நிலையங்களிலிருந்து ஒலி பரப்பப்படும் மின்காந்த ஒலியலைகள் ஒரு சில வினாடிகளில் உலகம் முழுவதும் பரவி விடுகின்றன. காசியில் இருப்பவர்கள் பேசினால் காஞ்சியில் இருப்பவர் உடனே கேட்கிறார். கல்கத்தாவில் இருப்பவர் பாடினால் கன்னியாகுமரியில் இருப்பவர் உடனே கேட்டு மகிழ்கிறார்.

இவ்விந்தைப் பொருளைக் கண்டுபிடித்துப் பெரும் புகழ் பெற்றவர் மார்க்கோனி என்னும் இத்தாலிய நாட்டு விஞ்ஞானி ஆவார். இவர் 1896ல் வானொலியைக் கண்டு பிடித்தார்.

**வானொலியின் நன்மைகள்:-** வானொலி காலத்தையும் தூரத்தையும் வென்ற கருவி எனலாம். பரந்து விரிந்த இப்பாருலகை மிகக் குறுகிய பகுதியாக மாற்றியது வானொலியே. உலகின் ஒரு மூலையில் நடைபெறும் செய்தியையும் நாம் உடனே அறிந்து கொள்கிறோம். உலக நாடுகளிடையே போர் நிகழும் சாத்தியக் கூறுகள் தோன்றினால் வானொலியின் பயனாக மற்ற நாட்டவர்கள் அறிந்து உடனே போர் நிகழாமல் தடுக்க முடிகிறது. பஞ்சம், வெள்ளக் கொடுமை எங்கு நேர்ந்தாலும் அதனை வானொலியின் வாயிலாய் அறிந்து பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனே உதவ முடிகிறது. நடுக்கடலில் செல்லும் கப்பல்களுக்கு இடர்ப்பாடு நேர்ந்தால் கரையில் இருப்பவர்களோடு தொடர்பு கொண்டு சமயத்தில் நல்லுதவியைப் பெற்று ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடிகிறது. கடற்கரையோரத்தில் வாழும் மக்கள் வானிலையை அறிந்து அதற்கொப்பச் செயல் முறைகளை மாற்றிக் கொள்ள முடிகிறது.

வானொலி விவசாயிகளுக்கு மிகவும் துணைபுரிகிறது எனலாம். வானொலி மூலம் புதுவகை விவசாய முறைகளை அறிந்து கொள்ளலாம். பயிர்களை வாட்டும் நோய்களையும் அவற்றை நீக்கும் வழி முறைகளையும் அறிந்து கொள்ளலாம். அதிக விளைவு காணும் முறைகளைத் தெரிந்து குறைந்த இடத்தில் நிறைந்த விளைவைப் பெறலாம். பயிருக்கேற்ற உரங்களைப் பக்குவமாக இட்டு நல்ல விளைவைக் காணலாம். வர்த்தகர்கள் விலைவாசியைத்தெரிந்து கொள்ளலாம். எப்பொருள் எங்கு மிகுதியாகக் கிடைக்கும் என்பதை அறிந்து அதிலிருந்து அப்பொருளைக் குறைந்த விலைக்கு வருவித்து நிறைய ஊதியம் பெறலாம்.

வானொலி மாணவர்களுக்குச் செய்யும் உதவி அளப் பரிது. தொடக்கப்பள்ளி மாணவர்கள் முதல் கல்லூரி மாணவர்கள் வரை யாவரும் வானொலியால் பெரும் பய னடைகின்றனர். பல ஆசிரியர்கள் பல வேளைகளில் செய்யும் பாடவிளக்கத்தை வானொலி சில விநாடிகளில் செய்து விடுகிறது. மொழி, வரலாறு, பொருளாதாரம், அறிவியல், நிலநூல், கணிதம் போன்ற பல பாடங்களை யும் மாணவர்கள் வானொலியின் மூலம் கேட்டு அறிய முடிகிறது.

பகல் முழுவதும் உழைத்து விட்டு மாலையில் வீடு திரும்பும் தொழிலாளி துன்பத்தை மறந்து இன்பமடை யச்செய்யும் நல்ல பொழுது போக்காக வானொலி விளங் குகிறது; வீட்டிலே அடைபட்டுக் கிடக்கும் மாதர்களுக் கும் வானொலி நல்ல பொழுது போக்காகும். வானொலி யின் மூலம் நல்ல இசையைக் கேட்டுமகிழலாம். சிறந்த நடிகர்களைக் கொண்டு நடிக்கப்படும் நல்ல நாடகங் களைக் கேட்கலாம். பட்டிமன்றம், கவியரங்கம், இலக்கி யச்சொற்பொழிவு முதலியவற்றைக் கேட்டுஇன்புறலாம்.

**வானொலியின் வளர்ச்சி:-** நம் சுதந்திர இந்தியாவில் பட்டி தொட்டிகளில் எல்லாம் வானொலி முழக்கத்தை நாம் கேட்க முடிகிறது. மின்சாரம் உள்ள இடம், இல் லாத இடம் என்ற வேறுபாடின்றி ஊராட்சியினரால் வானொலி நிலையம் திறக்கப் பட்டுள்ளது. வானொலி இல் லாத ஊர் இல்லை எனலாம். வானொலி மக்களின் வாழ்க் கையோடு பிரிக்க முடியாதபடி இணைந்து விட்டது. வானொலி வளர்ச்சியே இன்று நாம் காணும் தொலைக் காட்சி (டெலிவிசன்)யாகும். வானொலி மூலம் நாம் பேசு பவரின் ஒலியை மட்டுந்தான் கேட்க முடியும். ஆனால் தொலைக்காட்சியின் மூலம் பேசுபவரின் ஒலியோடு

உருவத்தையும் பார்க்க முடியும். முதல்நாள் நடந்த நிகழ்ச்சி மறுநாள் புகைப்படத்துடன் தாளிகைகளில் வெளிவரக் காரணம் தொலைக்காட்சியே ஆகும்.

தமிழகத்தில் சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோவை முதலிய இடங்களில் வானொலி நிலையங்கள் இருக்கின்றன. டில்லியில் உள்ள வானொலி நிலையமே இந்தியாவின் தலைசிறந்த வானொலி நிலையம் ஆகும்.

**முடிவுரை:** செவிச் செல்வத்தை நல்கிக் கற்றோரும் மற்றோரும் பயன்பெறச் செய்யும் வானொலிப் பெட்டி இல்லங்கள்தோறும் இடம்பெற வேண்டும். அதனால் விவசாயிகளும், வியாபாரிகளும், மாணவர்களும், மற்றவர்களும் பயனடைய வேண்டும். இந்திய நாடு எழில்மிகு பூங்காடாக மாறவேண்டும்.

## 21. விஞ்ஞானத்தின் நன்மை தீமைகள்

**முகவுரை:** மலைக்குகைகளிலும், மரக்கிளைகளிலும் வாழ்ந்துவந்த மனிதன் மாடமாளிகைகளில் வாழ்வதும், கால் நடையாலும் கட்டை வண்டியாலும் பயணம் செய்த மனிதன் கடுவேகத்தில் செல்லும் வானஊர்தியில் பயணம் செய்வதும், தீப்பந்தங்களாலும் எண்ணெய் விளக்குகளாலும் இருளை நீக்கி ஒளி ஏற்றிய மனிதன் இரவையும் பகலாக்கும் மின் விளக்குகளைப் பயன்படுத்துவதும், தீ மூட்டியும் புறுக்களின் மூலமும் செய்திகளை அறிவித்த மனிதன் தாளிகையில் அன்றன்று நடக்கும் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதும், தெருக்கூத்துக்களைக் கண்டு மகிழ்ந்த மனிதன் திரைப்படங்களைக் கண்டு களிப்பதும், மண்ணகத்தை உரிமை பாராட்டிய மனிதன் விண்ணகம் சென்று சந்

திர மண்டலத்தையும் தமதுடைமையாக்கத் துடிப்பதும், எழுத்தாணி கொண்டு ஓலைச்சுவடிகளில் எழுதி வந்த மனிதன் அச்சுப்பொறிகள் மூலம் விரைந்து நூல்களை வெளியிடுவதும் விஞ்ஞான வளர்ச்சியின் பயன்களேயாகும். விஞ்ஞானிகள் விண்ணையும் மண்ணையும் சாடி வியத்தகு பல புதுமைகளைக் கண்டுபிடித்துள்ளனர். அவற்றால் மக்கள் சமுதாயம் பல்லாற்றாலும் பயனடைந்து வருகிறது.

**போக்கு வரத்து:** பழங்கால மக்கள் காசி, இராமேசுவரம் செல்வதானாலும் கால் நடையாகவே சென்று வந்தார்கள். ஆனால், இக்கால மக்கள் ஒரு தெருவிலிருந்து மறு தெருவிற்கு செல்வதானாலும் பேருந்து வரவை எதிர்பார்த்து நிற்கின்றனர். நாட்டின் பல பாகங்களையும் ஒன்றாக இணைத்துப் புரட்சி செய்து பேருந்து, மகிழ்வுந்து, புகைவண்டி போன்ற ஊர்திகள் உலகின் பல பாகங்களையும் ஒன்றாக இணைத்து நீராவிக் கப்பல். விண்ணுக்கும் மண்ணுக்கும் தொடர்பை ஏற்படுத்தியது வானஊர்தி. சென்னையில் நண்பகல் உணவை அருந்திய ஒருவன் மாலைச் சிற்றுண்டிக்கு வாசிங்டன் செல்லும் அளவிற்கு இன்றையப் போக்கு வரவு வளர்ச்சியடைந்துள்ளது. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளும், செயற்கை நிலாக்களும் எதிர்காலத்தில் நமக்கு எல்லையற்ற பேருதவியைச் செய்யவிருக்கின்றன.

**மின்சாரம்:** மின்சாரம் வந்தபின் எண்ணெய் விளக்குகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. சிற்றூர் முதல் பேரூர்யாவும் ஒளிமயமாகக் காட்சியளிக்கின்றன. மின்சாரம் ஒளிதந்து உதவும் பணியோடு மட்டும்

நின்றுவிட வில்லை; உணவு சமைக்கவும், உடைகளைத் தேய்க்கவும், விசிறிகளைச் சுழற்றவும், நீர் இறைக்கவும் பயன்படுகிறது.

தொலைவரி, தொலைபேசி, கம்பி இல்லாத் தந்தி, திரைப்படம், ஒலிபெருக்கி, குளிர்பதனக்கருவி போன்ற புதுமைப் பொருள்கள்கூட மின்சார வளர்ச்சியினுல் நமக்குக் கிடைத்த அருஞ்செல்வங்களாகும்.

**விவசாய வளர்ச்சி:** விஞ்ஞான வளர்ச்சி விவசாயத்தை மிகவும் மேலோங்கச் செய்திருக்கிறது. 'அகல உழுவதை ஆழ உழு, என்பது பழமொழி. மரக்கலப்பையைப் பயன்படுத்தி அக்கால விவசாயி அகலமாகவும் ஆழமாகவும் உழ முடியாது திண்டாடினுன். ஏற்றங் கொண்டு நீர் இறைத்து மெய்வருந்த உழைத்தும் போதிய வருவாய் இன்றிப் புழுங்கினுன். ஆனுல், விஞ்ஞான வளர்ச்சியுற்ற இக்காலத்தில் எந்திரக் கலப்பை கொண்டு ஆழமாக உழுகிருன். நீர் இறைக்கும் பொறிகளைக் கொண்டு இறைத்து நிலம் செழிக்க நீர் பாய்ச்சுகிருன். மேடுபள்ளமாகவும், குண்டுங்குழியுமாகவும் உள்ள நிலத்தை டிராக்டர் என்னும் கருவியை .வைத்துச் சமப்படுத்துகிருன்.

விஞ்ஞானத்தின் மூலம் கண்டறிந்த இரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தி நல்ல விளைவைக் காண்கிருன். குறைந்த இடத்தில் நிறைந்த வருவாயைத்தரும் வழி முறைகளைச் செய்து விவசாயியால் உற்பத்தியைப் பெருக்க முடிகிறது.

**மருத்துவம்:** மருத்துவத்துறை விஞ்ஞானத்தால் பெரிதும் வளர்ச்சியடைந்திருக்கிறது எனலாம். சித்த

வைத்திய முறை, ஆயுர்வேத வைத்தியமுறை, யுனனி மருத்துவமுறை, ஹோமியோபதி மருத்துவமுறை போன்ற பல மருத்துவமுறைகள் இருந்தாலும் அலபதி என்னும் மேனாட்டு மருத்துவ முறையே சிறந்து விளங்குகிறது. காரணம்? அலபதி மருத்துவமுறை விஞ்ஞானத்தால் பெரிதும் வளர்ச்சியுற்று வருகிறது.

உடலில் உள்உறுப்புக்களில் என்ன முறை என்று கண்டறிய எக்ஸ்ரே நமக்குப் பெரிதும் துணைபுரிகிறது. தொழுநோய், பெருநோய், தீராதநோய் என்றெல்லாம் கூறப்படும் குட்டநோயையும், காசநோயையும் எளிதில் தீர்க்கும் முறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். வாந்திபேதி, நச்சுக்காய்ச்சல், அம்மை, பிளேக்கு, கக்குவான் போன்ற கொள்ளை நோய்கள் பரவாமல் இருக்கத் தடுப்பு மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளனர். ஒளியிழந்தவர் கண்களில், இறந்தவர் கண்களைப் பொருத்தி ஒளி பெறச் செய்கின்றனர். ஈரக்குலை கெட்டவர்களுக்குச் செயற்கை ஈரக்குலையைப் பொருத்திச் செயல்படச் செய்கிறார்கள். குலோரபம் மூலம் நோயாளியை மயக்கி வேதனை இல்லாமலே அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். இவை போன்ற பல வியத்தகு புதுமைகளை மருத்துவத்துறையில் விஞ்ஞானம் செய்துள்ளது.

**விஞ்ஞான வசதிகள்:** சாலைகள், பாலங்கள், அணைகள், காகிதம், தொலைவரி, வானொலி, அச்சுயந்திரம், செய்தித்தாள், நூற்பாலை, செயற்கைப் பொருள்கள் யாவும் விஞ்ஞான வசதிகளாகும். அரிசி, பால், மாவு, வைரம் போன்றவற்றை விஞ்ஞானிகள் செயற்கையாகவே செய்து வருகின்றனர்.

அச்சு எழுத்துக்கள் வந்ததும் அறிவுத்துறையில் பெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது. எழுத்தாளன் தன்

உள்ளக் கருத்துக்களை நூலாக்கி உலகெங்கும் பரப்ப அச்சுப்பொறி மிகவும் பயன்படுகிறது. நூற்பாலை, நெசவாலைகள் மூலம் பலர்சேர்ந்து பல ஆண்டுகள் செய்து வந்த வேலையை ஒரு பொறியின் மூலம் ஒரு சில நிமிடங்களில் செய்து முடிக்க முடிகிறது. தொலைபேசி, தொலைக்காட்சிகளின் மூலம் வெளியூர்களில் உள்ள நண்பர்களோடு பேசவும், அவர்கள் உருவத்தை நேரில் காணவும் முடிகிறது.

**தீமைகள்:** விஞ்ஞானத்தின் மூலம் இன்று உலகத்தையே ஒரு நொடியில் அழித்து விடலாம். நீர்வாயுக் குண்டு, அணுக்குண்டு, கண்டம்விட்டுக் கண்டம்பாயும் ஏவுகணைகள், போர் விமானங்கள் இவையாவும் உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. வல்லரசுகளிடையே போர் மூழுமாயின், உலகத்தை ஒருநொடியில் சுடுகாடாக்சி விடமுடியும். இதை அறிந்தே அறிஞர்கள் உலக சமாதானத்திற்குப் பெரிதும் பாடுபட்டு வருகின்றனர்.

**முடிவுரை:** விஞ்ஞானத்தில் நன்மைகளும் தீமைகளும் விரவி இருந்தாலும் தீமைகளைவிட நன்மைகளே மிகுந்துள்ளன. விஞ்ஞானத்தை அழிவு வேலைக்குப் பயன்படுத்தாது ஆக்கவேலைக்குப் பயன்படுத்த அறிஞர்கள் உலகம் முன்வர வேண்டும்.

மாணவர்களாகிய நாமும் விஞ்ஞானப்புதுமைகளைப் பயன்படுத்துவதோடு நின்றுவிடாது, விஞ்ஞானமேதைகளாக விளங்க முயலவேண்டும். பள்ளிகளில் விஞ்ஞானத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கற்றுச் சிறந்த விஞ்ஞானிகளாகமாறி எதிர்காலத்தில் நம் தாய்நாட்டின் பெருமையை உலகறியச் செய்யவேண்டும்.

## 22. பண்டைத் தமிழர் மற வாழ்க்கை

**முகவுரை:** "வீரம் செறிந்த தமிழ்நாடு" என்று தமிழர்களின் வீரம் செறிந்த சிறப்பைப் பாடினுர் அமர கவி பாரதி.

"இந்த மா நிலம் முழுதாண்டியிருந்தார்

இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர்"

என்று தமிழர்கள் உலகாண்ட விதத்தைக் கூறி உளம் பூரிக்கின்ருர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழனை இகழ்ந்தவன் தலையில் கல்லை ஏற்றி அதைக் கொண்டு கண்ணகிக்குச் சிலை எடுத்தான் சேரன் செங்குட்டுவன். இமயத்தில் புலிக்கொடியை நாட்டிப் புகழ் பெற்ருன் கரிகாற் பெருவளத்தான். வடநாடு முழுவதையும் வென்று தன்னடிப்படுத்தினுன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன். கடலில் கலஞ் செலுத்திச் சாவா, சுமத்ரா போன்ற நாடுகளையும் வென்ருன் இராசேந்திரச் சோழன். இவர்கள் தம் மறம் தரணியாவும் தலை வணங்கும் தன்மையைப் பெற்றதாகும்.

**அறப்போர்:** தமிழ் வேந்தர்கள் மாற்ருர் மீது போருக்குச் செல்லும் காலத்திலும் அறவழி தவருது நடந்து கொண்டனர். போர் நடைபெறப் போகும் இடத்தினின்று பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், முதலானேர் புகலிடம் தேடிக் கொள்க வென்று பறையறைந்து தெரிவிப்பர். அதன் பின்பே போருடற்றுவர் உயிருக்கு அஞ்சாத உயர் பண்பினர் தமிழ் மறவர்கள். அவர்கள் மார்பில் புண்பட்டு மாய்ளதையே மேலானதாகக் கருதினர். புறமுதுகு காட்டி ஓடுவோர் மீது மறந்தும் படை தொடுக்க மாட்டார்கள். மறந்து யாரும் படை தொடுப்பாரேயானுல் அவரைப்

'படைமடம் பட்டோர்' என்று இழிந்துரைப் பார்கள். தமிழர்கள் வெற்றியை விட வீரத்தையே உயர் வாக மதித்தார்கள்,

**போர் முறை:** தமிழ் வேந்தர்கள் போரின் தொடக்க மாகப் பகைவர்களின் பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்வார்கள். இவ்வாறு செய்பவர்கள் வெட்சி மாலையை அணிந்திருப்பார்கள். ஆகையால் இதைவெட்சித்திணை என்று அழைத்தனர். பகைவர்களால் கவர்ந்து செல்லப் பட்ட பசுக் கூட்டங்களை மீட்கச் செல்பவர்கள் கரந்தை மாலையை அணிந்திருப்பார்கள். ஆகையால் இதைக் கரந்தைத் திணை என்று அழைப்பார்கள். இம் மாடுபிடிச் சண்டையே போரின்தொடக்கமாகும். பகை வர்களது நாட்டைக் கைக்கொள்ளக் கருதிப் போருக்குச் செல்பவர்கள் வஞ்சிப் பூவை அணிந்திருப்பார்கள். ஆகையால் இதை வஞ்சித்திணை என்று அழைப்பார் கள். மதிலைக் காத்துநிற்கும் மன்னனது படைவீரர்கள் நொச்சிப் பூமாலையை அணிந்திருப்பார்கள், ஆகையால் இது நொச்சித்திணை எனப்படும். பகைவர்களது மதிலை வளைத்துக் கொள்ளும் படைவீரர்கள் உழிஞைப் பூமாலை யைச் சூடியிருப்பார்கள். ஆகையால் அது உழிஞைத் திணை எனப்படும்.

பகைவர்களோடு போரிடும் வீரர்கள் தும்பைப் பூமாலையைச் சூடி இருப்பார்கள். ஆகையால் அது தும் பைத்திணை எனப்படும். போரில் வெற்றிபெற்று மீளும் படைவீரர்கள் வாகைப் பூமாலையைச் சூடி இருப்பார் கள். ஆகையால் அது வாகைத்திணை எனப்படும். இவ் வாறு போரைப் பல பிரிவாகப் பிரித்து அவற்றிற்குரிய அடையாள மாலைகளையும் சூடிப் போரிட்ட மற வாழ்க்கை பழந்தமிழரின் வாழ்க்கையாகும்.

**அஞ்சாநெஞ்சம்:** பழந்தமிழ் மறவர்கள் புகழ்வருவதாக இருந்தால் உயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். பழிவருவதாக இருந்தால் உலகம் முழுவதும் ஒருங்கே கிடைப்பதாக இருந்தாலும் ஒருபோதும் செய்யமாட்டார்கள். "கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நின்றனர்". யானையோடும் தனித்து நின்று அஞ்சாது போரிட்டனர். தன்னை எதிர்த்து வந்த களிற்றின் மேல் கையிலிந்த வேலைப் பாய்ச்சினான், நிராயுதபாணியாக நின்றான். அப்போது மாற்றான் எய்த அம்பு மார்பில் பாய்ந்தது. அதை மார்பினின்று வெடுக்கென்று பறித்தான். அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மீண்டும் அவ்வம்பை மற்றொரு களிற்றின் மேல் பாய்ச்சினான் இதைத் திருவள்ளுவர்

"கைவேல் களிற்றொரு போக்கி வருபவன்

மெய்வேல் பறியாநகும்" என்று கூறியுள்ளனர்.

**மான மறவர்:** தமிழ் மறவர்கள் விழுப்புண் படாத நாட்களை வீணாகக் கழிந்த நாட்களாகக் கருதினர். போரில் இறந்த மறவர்களுக்கு நடுகல் சமைத்து வணங்கி வந்தார்கள். "வெற்றி அல்லது வீரமரணம்" என்னும் உயரிய குறிக்கோளை உடையவர்கள். போரில் தோல்வியுற்றால் வீடு திரும்பார். அவ்விடத்திலேயே உயிர் விடுவார்கள் அல்லது வடக்கிருந்து உயிர் துறப்பார்கள். முதுகில் புண்படுவதை மிகவும் இழிவாக மதித்தார்கள். அதற்காக வடக்கிருந்து உயிர்விட்ட மன்னர்கள் பலர். "தமிழனை இகழ்ந்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்று வஞ்சினங்கூறி வடவரை வென்றவனும் தமிழ் மன்னனேயாவான்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணுல் சிறை செய்யப் பட்டான். சிறையில் நீர் வேட்கை கொண்ட சோழன் சிறைக் காவலரிடம் நீர் வேண்ட, அவன் இழித்துரைத்ததோடு காலந்தாழ்த்தி நீர் கொண்டு வந்து தந்தான். சேரமான் தனது இழி நிலையைக் கண்டு பொருது சிறையிலேயே உயிர் விட்டான் என்ற செய்தி மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் செயலையே நமக்கு நினைவூட்டுகிறது.

**மாதர்தம் மறவாழ்க்கை:** தமிழகப் பெண்கள் வீரத்தில் சளைத்தவர்களல்லர். போர் முரசு கேட்டுப பொங்கி எழுந்த வீரமங்கை பால்முகம் மாருத பச்சிளங்குழந்தையாம் தன் ஒரே மகன் கையில் வேலைக் கொடுத்துச் "சென்றுவா! மகனே செருக்களம் நோக்கி!" என்று கூறிய செய்தியை நாம் இலக்கியத்தின் வாயிலாக அறிகிறோம். காவற்பெண்டு என்னும் நங்கையிடம் எங்கே உன்மகன் என்று கேட்ட பெண் ஒருத்தியிடம் அவள் "புலி சேர்ந்து போகிய கல்லளை" என்று தன்வயிற்றை உருவகப் படுத்திக் கூறிய செய்தியையும் இலக்கிய இயம்புகின்றது. தன் கணவனை அநியாயமாய்க் கொன்ற பாண்டிய மன்னனேடு வழக்குரைத்து வென்ருள் கற்புக்கரசியாம் கண்ணகி என்னும் பொற்புடை நங்கை.

**முடிவுரை:** பண்டைத் தமிழகத்தில் ஆடவர்களேயன்றிப் பெண்களும் வீரம் பொருந்தியவர்களாக இருந்தனர் பழந்தமிழர் உயிரைவிட மேலாக மானத்தை மதித்து வந்தார்கள். போரில் உயிர்விடுவதையே புகழ் வாழ்வு என்று கருதினர். அத்தகைய உயர் பண்பை நாம் போற்றிக் காக்கவேண்டும். மாற்ருன் படையெடுப்பு என்ருல் மருண்டு விடாது, தோல்வியைக் கண்டு துவண்டு விடாது, வீரத்தின் இருப்பிடம் தமிழகம் என்பதை மெய்ப்பித்துக் காட்டுவோமாக.

# 23. படக்காட்சியால் விளையும் நன்மைகள்

**முகவுரை:** கற்பனைக்கும் எட்டாத அற்புதப் புதுமைகள் விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. விஞ்ஞான வளர்ச்சியால் மக்கள் அடையும் பயன்கள் பலப்பல. அவற்றுள் மக்கள் மனதைக்கவர்ந்து அறிவுத் தெளிவை வளர்க்கும் அரிய கண்டு பிடிப்பு படக்காட்சியாகும். படித்தவர் முதல் பாமரர் ஈருகயாவர் மனதையும் ஈர்க்க வல்ல படக்காட்சி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**படக்காட்சியின் தத்துவம்:** புகைப்படக் கருவியின் மூலம் ஒரு காட்சியை முதலில் படமாக எடுப்பார்கள். அவ்வாறு எடுக்கப்பட்ட படத்தைப் படங்காட்டுங் கருவியில் (புரொஜெக்டர்) செலுத்துவார்கள். படப்பிடிப்புக் கருவியின் உதவியால் கோவையாக எடுக்கப்பட்ட சுருள் படங்காட்டும் கருவியால் பொருத்தமான வேகத்தில் ஓட்டப்படும் பொழுது படங்காட்டும் கருவியில் உள்ள பூதக்கண்ணுடி, கண்ணைப்பறிக்கும் ஒளிவிளக்கு இவற்றின் உதவியால் திரைப்படம் பெரிதாக விழுகிறது. இதுவே படக்காட்சியின் தத்துவமாகும். இத்தகைய கருவியை அமெரிக்காவைச் சேர்ந்த எடிசன் என்னும் விஞ்ஞானி கண்டு பிடித்தார்.

**வளர்ச்சி:** தொடக்கத்தில் அசையும் படங்களே திரையில் காட்டப்பெற்றன. பின் அசைவோடு ஒளியும் பெற்றுத் திரைப்படம் காட்சியளித்தது. நாட்கள் செல்லச் செல்ல உருவத்தின் நீளம், அகலம், உயரம் ஆகிய மூன்றையும் காட்டும் கனபரிமாணப் படங்களும், படத்

தைப் பெரிய அளவில் பார்க்க உதவும் சினிமாஸ்கோப்புகளும், ஒரேசமயத்தில் பல திரைகளில் படத்தை ஓட்டிக் காட்ட உதவும் சக்கரமாகவும் கண்டு பிடிக்கப்பட்டன. இன்று டெக்னிக்கலர், கேவாக்கலர் போன்ற பல வண்ணப் படங்கள் எடுக்கப் படுகின்றன.

**அருங்கலை:** படக்காட்சியை அருங்கலை எனலாம் நடனம், நாடகம்; ஒப்பனை, இசை, இலக்கியம், உரையாடல் போன்ற கலைகளுக்கெல்லாம் கருவூலமாகப் படக்காட்சி விளங்குகிறது, கூத்தாடிகள் என்று இழித்து உரைக்கப்பட்ட நடிகர்கள் படக்காட்சிக்கு வந்தபின் பெருமைக்குரியவர்களாக மதிக்கப் படுகிறார்கள். பரத நாட்டியம் பாங்குடன் வளர்ச்சிப் பெற்றுள்ளது. இலக்கிய எழுத்தாளர்கள் ஏற்றம் பெற்றுள்ளனர். இசைக்கலை புது மெருகுடன் மிளிர்கின்றது. நடிப்புக்கலை நாளும் வளர்ந்து வருகிறது. அழிந்துவந்த நாடகக்கலைக்குப் படக்காட்சி புதிய ஊட்டம் கொடுக்கிறது. ஆகையால் படக்காட்சியை அருங்கலை என்று கூறுவது பொருத்தமேயாகும்.

**நன்மைகள்:** படச்காட்சி, களைத்துப்போன நெஞ்சங்களில் களிப்பை ஊட்டுகிறது. ஆயிரம் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெறமுடியாத அறிவை ஒரு படக்காட்சியின் மூலம் பெற்றுவிடலாம். படக்காட்சி 'கலை கலைக்காகவே' என்ற நிலையை மாற்றிக் 'கலை வாழ்க்கைக்காகவே' என்ற நிலையை உருவாக்கி விட்டது. படக்காட்சியின் மூலம் எண்ணற்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது. நல்ல பொழுது போக்குச் சாதனமாகவும் அமைந்துள்ளது. வாழ்க்கைத் துன்பத்தில் உழலும் மக்கள் படக்காட்சிக்குச் செல்வதால் கவலையை மறந்து அமைதி பெறுகின்றனர். கதையும்,

கருத்தும், உரையாடலும், ஒப்பனையும், நடிப்பும், சிறப்பாக அமைந்த படக்காட்சிகள் மக்களின் மனதைத் தொடுகின்றன. பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு பாமரர் மனதையும் ஈர்க்க வல்லது.

**மாணவர்களும் படக்காட்சியும்:** படக்காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே விருந்தளிப்பதால் மாணவர்களுக்குப் பெரிதும் துணைபுரிகிறது. மாணவர்கள் வரலாற்றுப் படங்களைப் பார்ப்பதால், காட்சி வடிவிற் கண்ட நிகழ்ச்சிகள் நெஞ்சைவிட்டு நீங்காமல் நிலைத்து நிற்கின்றன. பல நாட்டின் பூகோள அமைப்பையும் படக்காட்சியின் மூலம் மாணவர்கள் பார்த்து அறிந்து கொள்கின்றனர். இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுகின்றனர். விஞ்ஞான விளக்கப் படங்களையும், கணித விளக்கப் படங்களையும், பொருளாதார வளர்ச்சி விளக்கப் படங்களையும் படக்காட்சி மூலங்கண்டு, தங்கள் பாட அறிவைப்பெருக்கிக் கொள்கின்றனர். உலகின் பல பாகங்களிலும் சிறந்து விளங்கும் அணைக்கட்டுகளையும், மலைகளையும், ஆறுகளையும் நேரில் சென்று காண்பதென்றால் முடியாத செயலாகும். அவற்றைப் படக்காட்சி மூலம் காணும்போது மாணவர்கள் நேரில் கண்டதைப் போன்ற உணர்வு பெறுகிறார்கள்.

**செய்திப்படம்:** படக்காட்சியில் செய்திப்படம் முதலிடம் பெற்றுள்ளது. இஃது அரசினரின் திட்டவளர்ச்சியை மக்களுக்குத் தெரிவிப்பதாகும். ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாடு பெற்றுள்ள வளர்ச்சியைச் செய்திப்படங்களைப் பார்ப்பதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி போன்றவற்றில் அரசினர் காட்டும் ஆர்வத்தை நாம் புரிந்து கொள்ளலாம். விளையாட்டு வீரர்

களின் வீரச்செயல்களையும், அயல் நாட்டுச் செய்தி களையும், ஐ. நா. சபையின் அரும்பணிகளையும் செய்திப் படங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**தீமைகள்:** படக்காட்சி மக்களின் மனதை எளிதில் கவர்வதால் அதில் காட்டப்படும் போலி நாகரிகங்க ளையே மக்கள் பின்பற்றுகின்றனர். அதனால், அநாகரி கத்தை நாகரிகம் என நம்பி மோசம் போகின்றனர். சமுதாயத்தில் உள்ள தீய செயல்களுக்குப் படக்காட்சி முக்கியத்துவம் கொடுப்பதால், அதைப்பார்க்கும் மக்கள் வாழ்க்கை கெடுகிறது. வேண்டாத உணர்ச்சிகளும் சுவைகளும் படக்காட்சிகளில் மிகுதியாகக் காட்டப்படு வதால் அவற்றைக் காணும் இளம் உள்ளங்கள் கெட் டழிகின்றன.

**முடிவுரை:** படக்காட்சிகள் நம்பண்பாட்டை விளக் கும் திரைஓவியமாகத் திகழவேண்டும். படத்தயாரிப் பாளர்கள் தீயகாட்சிகளை நீக்கிச் சமுதாயத்துக்கு நன் மைதரும் காட்சிகளையே படமாக்க வேண்டும். பொரு ளீட்டும் முயற்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளா மல் 'கலை கலைக்காகவே' என்ற கருத்துடன் படங்களைத் தயாரிக்க வேண்டும். வெறும் பொழுது போக்கிற்காகப் படம் எடுப்பதை விட்டு விட்டு அறிவு வளர்ச்சிக்காகப் படம் எடுக்க வேண்டும். சிறுவர்களின் மனவளர்ச்சிக்கு ஏற்பப் படக்காட்சிகள் மிகுதியாக வெளிவர வேண்டும். இவ்வாறு செய்தால் படக்காட்சி போன்று மக்களுக்கு உற்றதுணையாய் நின்று உதவுவது வேறொன்றும் இல்லை எனலாம்.

வாழ்க அறிவியல்! வளர்க படக்காட்சி;

## 24. மாணவர்களின் சமுதாயத்தொண்டு

**முன்னுரை:** இன்றைய மாணவர்களே வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகளாவர். "மாணவர்களே நம் நாட்டின் தூண்கள். அவர்களது கையிலே தான் எதிர்கால இந்தியா உள்ளது" என மனிதருள் மாணிக்கம் அமரர் சவகர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மாணவர்கள் தமது மாணவப் பருவத்தில் நல்ல பழக்க வழக்கங்களைப் பழகியும், ஆசிரியர்களின் அறிவுரைகளைக் கைக்கொண்டும் நல்லறிவு பெற்றும் திகழவேண்டும். அத்தகைய அடிப்படையே அவர்களது பிற்கால வாழ்வு சிறக்க உதவும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழி. இளமையில் மாணவர்களிடம் படியும் நற்குணமே வாழ்நாள் முழுவதும் பிரதிபலிக்கும். மாணவர்கள் சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். சமுதாய முன்னேற்றத்தில் மாணவர்களுக்கும் பங்குண்டு.

**சமுதாய நிலை:** நம் நாட்டின் இன்றைய சமுதாய நிலை கண்டு நாம் பெருமைப்பட முடியாது. இரங்கத்தக்க நிலைதான் உள்ளது. நமது மக்களில் பெரும் பாலோர் கல்வியறிவற்றவர்கள். அதனால் பலவகையான மூட நம்பிக்கைகளும், சாதி, மத வேறுபாடுகளும் மண்டிக் கிடக்கின்றன. இவற்றை ஒழிக்கக் கல்வி கற்ற மாணவ சமுதாயம் முன் வரவேண்டும். மாணவர்கள் தமது ஓய்வு நேரங்களில் சமுதாயத் தொண்டு செய்ய வேண்டும். குறிப்பாகக் கிராமங்களில் தமது பணியைத் திறம்படச் செய்யவேண்டும்.

**சமுதாயத் தொண்டு: விவசாயம்:** நமது கிராமமக்கள் அனைவரும் ஏறக்குறைய விவசாயிகளே. அவர்கள் பழங்கால முறைகளேயே கையாண்டு இன்றும் விவசாயம் செய்கின்றனர், விவசாயத்துறையில் இன்று விஞ்ஞானம் பல வியக்கத்தக்க சாதனைகள் புரிந்துள்ளது. அவற்றை நமது விவசாயிகள் அறிந்து கொள்ளாததால் பழைய முறைகளையே கையாளுகின்றனர். அதனால் விளைவு அதிகரிக்கவில்லை. உற்பத்தி பெருகவில்லை. அவர்களுக்கு இக்கால விஞ்ஞான முறைகளைக் கையாளுவது பற்றியும், அவற்றால் ஏற்படும் பயன்களைப் பற்றியும் மாணவர்கள் எடுத்துக் கூறவேண்டும்.

முதலில் உழவுக்கு அதிக ஆழமாக மண் புரட்டுவதற்கு உதவும் டிராக்டர் முதலிய கருவிகளைப் பயன்படுத்துவதுபற்றி எடுத்துக் கூறலாம். டிராக்டரைப் பயன்படுத்த நிலங்கள் துண்டு துண்டாக இருந்தால் முடியாது. அதனால் பலர் ஒன்றாகக் கூடித் தமது நிலங்களை ஒன்று சேர்த்துக் கூட்டுப்பண்ணை மூலம் விவசாயம் செய்யலாம். அப்போது டிராக்டர் போன்ற கருவிகளைப் பயன்படுத்தலாம். அதிக விளைச்சலைத் தரக்கூடிய தரமுள்ள விதைகள், அவற்றிற்குப் பயன்படுத்தும் இரசாயன உரங்கள், மற்றும் பயிர்களுக்கு நோய்கள் வந்தால் அவற்றைப் போக்கப் பூச்சிமருந்துகள் முதலியவற்றைப் பயன்படுத்துவது பற்றியும், அதனால் கிடைக்கும் அதிக ஊதியத்தைப் பற்றியும் மாணவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறலாம். மேலும் அரசினர் விவசாயிகளுக்கு உழவுக் கருவிகள், மாடுகள் வாங்கவும், கிணறு வெட்டவும் வழங்கும் கடன் உதவிகளைப் பயன்படுத்தி நன்முறையில் விவசாயம் செய்யும்படி ஆலோசனைகள் வழங்கலாம்.

**பிறதொழில்கள்:** விவசாய மக்கள் தமது ஓய்வு நேரங்களில் பிற குடிசைத் தொழில்களைச் செய்யும்படி மாணவர்கள் ஊக்கமூட்டலாம். நமது நாட்டுக் குடிசைத் தொழில்கள் வளர அரசினர் பல திட்டங்கள் தீட்டியுள்ளனர். அவற்றைப் பயன்படுத்தி அரசினரின் உதவி பெற்றுக் கோழிப்பண்ணை வைத்தல், தேனீ வளர்த்தல், நூல் நூற்றல், பெட்டி, கூடை முடைதல், பாய், விசிறி பின்னுதல் முதலிய பல தொழில்களைச் செய்து ஊதியம் பெறலாம். இவற்றின் அவசியம் பற்றியும், மக்கள் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்க வேண்டியது பற்றியும் மாணவர்கள் எடுத்துக் கூறுவது சிறந்த சமுதாயத் தொண்டாகும்.

**கல்வி:** மாணவர்கள் கல்வியின் அவசியத்தைக் மக்களுக்கு விளக்கவேண்டும். கல்வியறிவின் மூலமே நாட்டில் நடைபெறும் பல செய்திகளையும், விவசாயம், வியாபாரம் பற்றிய செய்திகளையும் அறியமுடியும் எனவும் கூறவேண்டும். மேலும் சிறுவர்களைப் பள்ளிக்குக் கட்டாயமாக அனுப்ப வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்க வோண்டும். மற்றும் முதலியவர்களுக்கு மாலை நேரத்திம் கல்வி கற்றுக்கொடுக்கலாம். செய்தித் தாள்களையும் பல அறிவு வளர்ச்சிக்குகந்த நூல்களையும் கல்வியறிவில்லாத மக்களுக்குப் படித்துக் காட்டலாம். நூல்நிலையங்களையும், படிப்பகங்களையும் ஏற்படுத்தி மக்கள் தமது ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வகையில் கழிக்கும் படியாகச் செய்யலாம். வசதியிருக்குமிடங்களில் வானொலி அமைத்துக் கொடுக்கலாம். மேலும் அரசினரின் செய்தித் துறையினர் உதவி கொண்டு பல

செய்திப் படங்களையும், நவீன விவசாய முறைகளையும், தொத்துநோய்த் தடுப்பு முறைகளையும் பேசும் படங்கள் மூலம் காட்டி மக்களின் பொதுஅறிவை வளர்ச்சிபெறச் செய்யலாம்.

சுகாதாரம்: நமது கிராம மக்களிடம் காணப்படும் சுகாதாரச் சீர்கேட்டைக் களைந்தெறிய முயற்சி செய்யலாம். நோய்கள் வராமல் தடுக்கச் சுத்தமே மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்த வேண்டும். "சுத்தமே சுகம் தரும்" என்பது பழமொழி. மக்கள் தமது வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும். குடிநீர் எடுக்கும் கிணறுகளையோ, குளங்களையோ அசுத்தம் செய்யக்கூடாது. தொத்து நோய்கள் பரவும் காலங்களில் தடுப்பு ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். குடிநீரைக் கொதிக்க வைத்துக் குடிக்கவேண்டும். சிறு குழந்தைகளை நோய்கள் எளிதில் பீடிக்குமாதலால் அவர்களை நன்முறையில் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என எடுத்துரைக்க வேண்டும்.

முடிவுரை: மாணவர்கள் தமது மாணவ வாழ்க்கையில் மேலே கூறியபடி பலவகையான சமுதாயத் தொண்டு செய்யவேண்டும். "மக்கட்குத் தொண்டு செய்வதே பிறவிப்பயன்" என்பது பெரியோர் வாக்கு. நமது இந்திய சமுதாயம் முன்னேறி உலகில் ஒரு சிறந்த, நாகரீகமிக்க பண்பாடுள்ள சமுதாயமாகத் திகழ மாணவ மணிகள் உறுதுணை புரியவேண்டியது அவர்களின் கடமையாகும்.

## 25. நான் விரும்பும் கவிஞர்

**முன்னுரை:** முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நின்றிலங்கும் தமிழன்னை உலகிற்கு ஈன்றளித்த கவிஞர்கள் பலர். வையகம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய வள்ளுவரும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைக் கொஞ்சு தமிழில் எழுதிப் புகழ்பெற்ற இளங்கோவடிகளும், கற்பனைக் களஞ்சியமாம் கம்பரும், விடுதலைப் பண்பாடி மக்களை வீறுகொள்ளச் செய்த அமரகவி பாரதியும், பாட்டின் திறத்தாலே இவ்வுலகைப் பாலித்திடச்செய்த பாவேந்தர் பாரதிதாசனும் தமிழன்னை ஈன்றளித்த தமிழ்ப்பெருங் கவிஞர்கள் ஆவார்கள். இவர்களுள் புரட்சிக்கவி என்றும், புதுமைக்கவி என்றும், புதுவைக் குயில் என்றும், பாவேந்தர் என்றும் பைந்தமிழர் பாராட்டும் பாரதிதாசனே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.

**தோற்றமும் இளமையும்:** தமிழகத்தின் தலைசிறந்த நகரங்களுள் புதுச்சேரியும் ஒன்று. வங்கக்கடல் அலைகள் பொங்கிவரும் கடற்றுறைப் பட்டினம். மருதமும் நெய்தலும் மயங்கி மாண்புடன் திகழும் மாநகர். இயற்கை எழிலும் செயற்கை அழகும் ஒருங்கிணைந்து எழில் கூட்டும் திருநகர். அந்நகரிலே வணிகர் குடியிற் தோன்றியவர் கனகசபை முதலியார். அவரது அருந்தவச் செல்வராய்க் கி. பி. 1891-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாளில் நம் பாவேந்தர் அவர்கள் பிறந்தார். பெற்றோர் அவருக்குச் சுப்புரத்தினம் என்று பெயரிட்டு அன்புடன் அழைத்து வந்தனர்.

சுப்புரத்தினம் இளமையில் பிரஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும் தமிழ் மொழியைப் பயில்வதில்

தனி ஆர்வங்காட்டினர். பிரஞ்சு மொழிப் பள்ளியிற் பயின்றதைவிடத் தமிழ் மொழிப் பள்ளியில் பயின்ற காலமே அதிகம். அவர் தமது பதினாரும் வயதிலேயே தமிழ்க்கல்லூரியிற் புகுந்தார். இரண்டாண்டில் கல்லூரியிலேயே முதல்வராகத் தேர்வு பெற்ருர். இளமையிலேயே முத்தமிழிலும் வல்லவராகத் திகழ்ந்தார். பள்ளி நாடகங்களில் பங்கேற்று நடித்துப் பலரது பாராட்டையும் ஒருங்கே பெற்ருர். சிறுவயதிலேயே சிறு சிறு பாடல்களை அழகுறஎழுதித் தமது நண்பர்களிடம் இசையோடு பாடிக்காட்டுவார். அதனல் அவர் அடையும் இன்பத்தை அளவிட்டுரைக்க முடியாது.

**பாரதிதாசன் ஆன வரலாறு:** ஆங்கிலேயரின் அடக்குமுறையினின்று மறைந்து வாழப் பாரதியார் புதுச்சேரியைப் புகலிடமாகக் கொண்டார். அப்பொழுது ஒருநாள் சுப்புரத்தினம் நண்பர் ஒருவரின் திருமண விருந்திற்குச் சென்ருர். அங்குப் பாரதியாரின் நாட்டுப் பாடலை இசையோடு பாடினர். பாரதியாரும் அவ்விருந்திற்குச் சென்றிருந்தார். அதைச் சுப்புரத்தினம் அறியார். தன்பாடலை இசையோடு பாடிய சுப்புரத்தினத்தைக் காணப் பாரதியார் விழைந்தார். திருமண வீட்டில் சுப்புரத்தினம் பாரதியாருக்கு அறிமுகமானர். "சுப்புரத்தினம் ஒருகவி-அதற்குரிய தன்மை அவரிடம் உண்டு" என்பதைப் பாரதியார் உணர்ந்தார்.

பின்பொருநாள் பாரதியார் தன் நண்பர்களிடம், "சுப்புரத்தினம் கவிதை இயற்ற வல்லவன்" என்று கூறினர். "எங்கே எழுதச் சொல்லுங்கள் பார்ப்போம்" என்று அவர்கள் கேட்டனர். பாரதியார் பாடும்படி கூறினர். பாரதியாரின் வேண்டுகோளுக்கிணங்கச் சுப்புரத்தினம் "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்

னும் பாடலைப் பாடினார். அப்பாடலின் சிறப்பினைப் பாரதியார் பாராட்டினார். அன்றிலிருந்து பாரதியாருக்கும் சுப்புரத்தினத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சுப்புரத்தினம் பாரதியார்பால் அளவுகடந்த அன்பு கொண்டார். அவ்வன்பின் காரணமாகத் தன் பெயரைப் பாரதிதாசன் என்று புனைந்து கொண்டார்.

**புரட்சிக்கவி:** சமுதாயம் ஒரு சாக்கடை. அதிலுள்ள ஏற்றத்தாழ்வு, மூடநம்பிக்கை, பெண்ணடிமை, சாதி வேறுபாடு போன்றவை சாக்கடையில் கலந்து விட்ட கசடுகள் என்பதைப் பாரதிதாசன் உணர்ந்தார். அவை அவர் மனதைப் பெரிதும் உறுத்தின. அவரது உள்ளத்தில் புரட்சிக் கருத்துக்கள் பூத்துக்குலுங்கின. எண்ணங்களைக் கவிதை உருவில் வடித்துப் புகழ்பெற்றார். தொழிலாளர்படும் துன்பநிலையைக் கண்டு துடித்தார்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுதுபயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவன்
தோள்கள்?"

என்று கேட்டுத்தொழிலாளரின் விடுதலைப்பண்பாடினார்.

"ஏழை முதலாளி என்ப தில்லாமற் செய்"

என்று வேண்டுகோள் விடுத்தார்.

"வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் எனும் நினைவா?
கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே!"

என்று புரட்சிக் கருத்துக்களைப் பொழிந்தார்.

**பெண்ணுலகு:** ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்று அமைத்து விட்ட கொடுமையை எண்ணிக் குமைந்தார் நம் கவிஞர். கைமைக் கொடுமையைக் கண்டு கலங்கினார். மூடத்திருமணத்தைச் சாடினார். எழுச்சியுற்ற பெண்களுக்கு ஏற்றம் தந்தார். குழந்தை மணத்தின் கொடுமையை விளக்கினார்.

"கோரிக்கை அற்றுக் கிடக்கு தண்ணே-இங்கு
வேரில் பழுத்த பலா" என்று கைம்மைத்துயரைக் கட்டறுக்கப் பாடினார்.

"கல்யாணம் ஆகாத பெண்ணே!-உன்
கதி தன்னை நீ நிச்சயம் செய்க கண்ணே!"

என்று கல்யாணமாகாத பெண்களுக்கு விழிப்புணர்வை ஊட்டினார்.

**பைந்தமிழ்ப் பாவலன்:** தமிழ் என்னும் தேனமுதை உண்டு சுவைத்து மெய்மறந்து பாடினார் நம் கவிஞர். இன்பத்தமிழின் இனிமையைக் கண்டார்.

"தமிழுக்கும் அமுதென்று பேர்! அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"

என்று தமிழின் பெருமையைத் தரணி எங்கும் பறை சாற்றினார்.

"இனிமைத் தமிழ் மொழி எமது -எமக்கு
இன்பந் தரும்படி வாய்ந்த நல் அமுது"

என்று தமிழின் மேல் உரிமை கொண்டாடும் பாங்கு தனிச் சிறப்பு வாய்ந்ததாம்.

"எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதிடவும் வேண்டும் இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்" என்று தமிழ்வளர்ச்சிக்கு வழி வகுத்துத் தந்தார்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!" என்று சங்கநாதம் முழங்கும் பாவேந்தரின் தமிழ்ப் பற்றை எடுத்து இயம்பவும் கூடுமோ!

**இயற்கைப் புலவர்:** பாரதிதாசன் இயற்கையோடு ஒன்றிய இயற்கைப் புலவர். அவர் இயற்கையின் ஒவ்வோர் அணுவிலும், ஒவ்வோர் அணுவின் அசைவிலும் ஈடுபட்டு அதனைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இயற்கையின் மிகச்சிறிய - பிறர் பொருட்படுத்தாத காட்சிகளையும் படம்பிடித்துக் காட்டுகிறார். மாலைப்போதில் சோலையின் பக்கம் சென்ற அவர் சிரித்த முல்லையின் சிறப்பைத் தெரிவிக்கும் திறன் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. உதயசூரியன் எழிற் காட்சி, முட்புதர்கள் மொய்த்த பெருங்காடு, ஆடுகின்ற மயிலின் அழகு போன்ற அவர்தம் பாடல்கள் படிப்போர் மனதில் பசுமரத் தாணிபோல் பதியும் தன்மையைப் பெற்றவைகளாம்.

**புதுவைக்குயில்:-** பாரதிதாசன் வெறும் கவிஞர் மட்டும் அல்ல. சிறந்த பத்திரிகை ஆசிரியரும் ஆவார். புதுவைக்குயில் பற்றித் தெரியாதவர்கள் தமிழகத்தில் யாரும் இலர். புதுவைக் குயிலின் குரல் தமிழகம் எங்கும் ஒலித்த காலம் ஒன்றுண்டு. பாரதிதாசனார்; நடத்தி வந்த கிழமை இதழே 'குயில்' எனப்படும். குயிலின் வாயிலாகப் பாரதிதாசன் தன் எண்ணக் கருத்

துக்களைப் பாடல்களாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டார். அதனால் சிறந்த பத்திரிகை ஆசிரியர் என்ற பாராட்டையும் பெற்றார்.

**கவிஞரின் நூல்கள்:-** பாரதிதாசன் எழுதிய பாடல்கள் 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற தலைப்பில் மூன்று பிரிவுகளாக வெளியாகி இருக்கின்றன. பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திட்டு என்னும் நூல்கள் அவர்தம் பைந்தமிழ்க் காவியங்கள். 'அழகின் சிரிப்பு' அவர் இயற்கையின்பாற் கொண்ட ஈடுபாட்டை நமக்கு விளக்கும் சிறிய நூலாகும். மாதர்களின் ஒளி விளக்காக விளங்கும் 'குடும்ப விளக்கு' ஐந்து பாகங்களைக் கொண்டது. 'தமிழ் இயக்கம்' நல்ல தீர்ப்பு, அமைதி போன்றவை அவர்தம் கவிதை நூல்கள். 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' சௌமியன் போன்றவை அவர்தம் நாடக நூல்களாகும். அவரது இசைப் புலமையை வெளிக்காட்டும் நூலாக 'இசையமுது' என்னும் பேரால் இரண்டு பாகங்கள் வெளியாகி உள்ளன.

**கவிஞரின் இறுதி வாழ்க்கை:-** பாரதிதாசன் தன் இறுதி மூச்சு உள்ளவரையிலும் பைந்தமிழ் வளர்ச்சிக்காகவே பாடுபட்டு வந்தார். அன்பும், அறனும் நின்றிலங்க, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார். தாமெழுதிய 'பாண்டியன் பரிசு' என்னும் காவியத்தைத் திரைப்படமாக்கக் கருதினார். சென்னை சென்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்! ஓயா உழைப்பால் உடல் நலம்பாதிக்கப்பட்டது. நோய்வாய்ப் பட்டார். அறிஞர் உலகம் அழுது புலம்ப, புலவர்கூட்டம் புலம்பித்துடிக்க, மக்கள் கூட்டம் வாய்விட்டலற, தமிழ் அன்னையைத்

தவிக்கவிட்டு — கி. பி. 1964ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 26ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**முடிவுரை:** பாரதிதாசன் மறைந்தார். ஆனல் அவர்தம் பைந்தமிழ்ப் பாடல்கள் பாருள்ள அளவும் நிலைத்து நிற்கும். தமிழுக்கும் சமுதாயத்துக்கும் அவர் செய்துள்ள தொண்டைத் தமிழர்கள் என்றும் மறவார். கவிஞர் உலகில் பாரதிதாசன் தனக்கொரு பரம்பரையையே உருவாக்கிக் கொண்டார் என்று கூறலாம். பாரதிதாசன் வழியைப் பின்பற்றி இன்றையக் கவிஞர்கள் பலர் கவிதை புனைகின்றனர். பாரதிதாசன் பரம்பரை வளர்ந்து பைந்தமிழ் செழிக்க நாம் நம்மாலான பணியினைச் செய்வோமாக.

வாழ்க தமிழ்! வளர்க பாரதிதாசன் புகழ்!

## 26. பத்திரங்கள்

### விற்பனை ஆவணம். ரூ 5000/-

பிலவங்க ஆண்டு, ஆவணித் திங்கள், 9ஆம் நாள், (25-8-1967), திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் துணைவட்டம், புதுக்கோட்டையில் இருக்கும், உழவு, சாமிநாதன் புதல்வர், வேலுச்சாமிக்கு மேற்படி ஊரிலிருக்கும் நல்லதம்பி புதல்வர், உழவு நடராசன் எழுதிக்கொடுத்த நன்செய் நிலம் விற்பனை ஆவணம் என்னவென்றால்.

என் தந்தையாரால் விலைக்கு வாங்கப்பட்டு, அவர் புழங்கி வந்து அவருக்குப் பின்பு எனக்கு உரிமையாகி, என் அனுபவத்தில் இருந்துவரும் கீழே அட்டவணை 1இல் விவரிக்கப்பட்ட நன்செய் நிலத்தைத் தங்களுக்கு விற்பனை செய்வதாக விலைபேசி முடித்த ரூ. 5000/- இந்த ரூபாய் ஐயாயிரமும் என் சில்லறைக் கடன்களைத் தீர்ப்பதற்காகவும் குடும்பச் செலவுக்காகவும் நான் இன்று கீழே கண்ட சான்றினரின் முன்னிலையில் பெற்றுக்கொண்ட வகையில் என் பற்றுகிவிட்டது. ஆதலின், இந்நாள் முதல் தாங்களே விற்பனை நிலத்தைக் கைப் பற்றித் தாங்களும் தங்கள் வழிவருவோரும் தலைமுறை தலைமுறையாக எல்லா உரிமைகளுடனும் ஆண்டு புழங்கிக் கொள்வீர்களாக. விற்பனை நிலம் எனக்கு உரியதாய் இருந்ததென்றும், என் புழக்கத்தில் உள்ளதென்றும், அதைப் பொறுத்து யாதொரு தொடக்கும் இல்லையென்றும் உறுதி கூறுகிறேன். வேறு யாரேனும் இந்நிலத்துக்கு உரிமை கொண்டாடி அதனால் தங்களுக்கு இழப்பு நேரிட்டாலும், வேறு தொடக்கு ஏதேனும் இருந்து அதனால் தங்களுக்கு இழப்பு நேரிட்டாலும்,

அத்தகைய இழப்புக்களையும் செலவுகளையும் கீழே அட்டவணை 2-இல் கண்ட என் வேறு சொத்தைப் பொறுத்து ரூ. 5500/- (ஐயாயிரத்து ஐந்நூறு) வரை தீர்த்துக் கொடுப்பேனாக.

## அட்டவணை—1

திருநெல்வேலி மாவட்டம், சீவைகுண்டம் துணை வட்டம், புதுக்கோட்டையில், பட்டா 47இல் அடங்கிய நன்செய் 6, எண் மறு அளவு 275, ஏக்கர் 1, செண்டு 55 (ஏக்கர் ஒன்று செண்டு ஐம்பத்தைந்து) இதற்கு ஏற்பட்ட எல்லா உரிமைகள் உள்பட.

## அட்டவணை—2.

மேற்படி மாவட்டம், மேற்படி துணைவட்டம், மேற்படி புதுக்கோட்டையில், மேலே கண்ட என் பட்டா எண் 47இல் அடங்கிய நன்செய் மறு அளவு எண் 280 ஏக்கர் 2. (ஏக்கர் இரண்டு) இதற்கு ஏற்பட்ட எல்லா உரிமைகள் உள்பட.

ஒப்பம்,

ந. நடராசன்.

சான்றினர்.

1. மயிலேறும் பெருமாள், வெள்ளைச்சாமி புதல்வன்,
புதுக்கோட்டை.
2. வேங்கடசாமி, முத்துச்சாமி புதல்வன்,
புதுக்கோட்டை.

எழுதியவர்:

திருமலைச்சாமி, வடிவேலன் புதல்வர்,
புதுக்கோட்டை.

## 27. குத்தகை ஆவணம் ரூ. 1000.

பிலவங்க ஆண்டு, ஆவணித் திங்கள், 12ஆம் (28—8—1967), மதுரை மாவட்டம், பெரியகுளம் துணைவட்டம், மேல்மங்கலத்திலிருக்கும் கந்தசாமி புதல்வர் இந்து, வாணிகம் மாரியப்பன் 1, மேற்படி ஊரிலிருக்கும் இராமலிங்கம் புதல்வர் இந்து பயிர்த்தொழில், அருட்செல்வன் 2, ஆகிய நாம் இருவரும் மனம் ஒப்பி எழுதிக்கொண்ட நன்செய் நிலம் குத்தகை ஆவணம் என்னவென்றல் :

நம்மில் முதல் நபருக்குச் சொந்தமானதும் கீழே சொத்து விவரத்தில் கண்டதுமான ஏக்கர் 2, செண்டு 25 பரப்புள்ள நன்செய் நிலத்தை நம்மில் இரண்டாவது நபர் இன்று முதல் 5 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டுள்ளார். குத்தகைக்கு ஒப்புக்கொண்ட இரண்டாவதுநபர் ஆண்டொன்றுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்ட ரூ. 1000 ஒவ்வொரு ஆண்டின் குத்தகையையும் அவ்வாண்டு இறுதியில் ஒவ்வொரு ஆவணித் திங்கள் 20ஆம் நாளுக்குள் இரண்டாம் நபர் முதல் நபரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். கெடுமுடிவில் குத்தகை நிலத்தை முதல் நபரிடம் ஒப்புவித்துவிட வேண்டும். மேற்குறித்தபடி செலுத்தத் தவறினால் குத்தகைத் தொகைக்குத் தாங்கள் ஒன்றுக்கு ரூ. 100-க்கு வட்டி ரூ. 1 வீதம் செலுத்த வேண்டும். மேலும் மூன்று மாதங்களுக்கு மேல் குத்தகைத்தொகையைக் கொடுக்காவிடில், நிலத்துக்கு உரியவரான முதல் நபர் இரண்டாவது நபருக்குத் தெரிவிக்காமலே குத்தகை நிலங்களில் நுழைந்து அனுபவித்துக் கொள்ளலாம். மேலும் நிலுவை நிற்கும் குத்தகைப் பணத்தை

வட்டியுடனும் செலவு தொகையுடனும் வசூல் செய்து கொள்ள உரிமையுடையவர் ஆவார்.

குத்தகை நிலத்தின் வரியை முதல் நபரே செலுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தப்படிக்கு நாம் இருவரும் ஒப்பி எழுதிக் கொண்ட குத்தகை ஆவணம்.

## சொத்து விவரம்

மதுரை மாவட்டம், பெரியகுளம் துணை வட்டம், மேல் மங்கலத்தில், அயன் நன்செய் ம. அ. எண் 175. ஏக்கர் 2 (இரண்டு) செண்டு 25 (இருபத்தைந்து) இதற்கு ஏற்பட்ட எல்லா உரிமைகளும் உட்பட.

ஒப்பம்,

க. மாரியப்பன் 1.

இ. அருட்செல்வன் 2.

சான்றினர்:

1. வடிவேலன், குருசாமி புதல்வன்,
மேல்மங்கலம்.

2. தில்லைநாயகம், மருதநாயகம் புதல்வன்,
மேல்மங்கலம்.

எழுதியவர்:

கனகசுந்தரம், கமலநாதர் புதல்வர்,
மேல்மங்கலம்.

## 28. ஈடு அடைமானம் ரூ. 1000.

பிலவங்க ஆண்டு, ஆவணித் திங்கள், 13ஆம் நாள் (29—8—1967) மதுரை மாவட்டம், மேலூர்த் துணை வட்டம், கீழ வளவுக் கிராமத்திலிருக்கும், முருகேச பாண்டியன் புதல்வன், பயிர்த்தொழில், சந்திரசேகரனுக்கு, மேற்படி ஊரிலிருக்கும் சாமிநாதன் புதல்வன். வாணிகம், சங்கரலிங்கம் எழுதிக்கொடுத்த ஈடு அடைமான ஆவணம் என்னவென்ருல்:

மேற்படி கீழ வளவுக் கிராமத்தில் எனக்கு உரிமையானதும் கீழே விவரிக்கப்பட்டதுமான 1 ஏக்கர் நன்செய் நிலத்தை, எனது வியாபாரத்தை மேலும் நன்கு நடத்த வேண்டும் என்ற காரணத்தால் ரூ. 1000 (ஆயிரத்துக்கு) ஈடு அடைமானம் வைத்துக் கீழே கண்ட சான்றினரின் முன்னிலையில் ரூ. 1000/-(ரூ. ஆயிரமும்) பெற்றுக்கொண்டேன். ரூ. 1000/-மும் என் பற்ருய் ஆகிவிட்டபடியால் மேற்படி தொகைக்கு ரூ. 100-க்கு வட்டி ரூ. 5/- வீதம் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் செலுத்தி வருவேனுக. முதல் தொகையையும் நிலுவை நிற்கும் வட்டியையும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் செலுத்தி வைப்பேனுக. ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் வட்டித் தொகையைக் கட்டத் தவறினுல் முதலுக்கு, ரூ. 100/-க்கு ஆண்டு ஒன்றுக்கு வட்டி ரூ. 10/- ஆக முதலும் வட்டியும் தாங்கள் வேண்டும்போது செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மேலே குறித்தபடி கட்டத் தவறினுல் முதலையும் வட்டியையும் சட்டப்படி வசூல் செய்துகொள்ளத் தங்களுக்கு உரிமை உண்டு.

தங்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்கு ஈடு சொத்துப் போதாவிட்டால் என்னுலும் என் பிற சொத்துக்களாலும் செலுத்தக் கடமைப்பட்டவன் ஆவேன்.

இந்த அடைமானச் சொத்தில் எந்தவிதத் தொடக்கும் இல்லையென்று உறுதி கூறுகிறேன்.

இந்தப் படிக்கு நான் எழுதிக்கொடுத்த ஈடு அடைமான ஆவணம்.

## சொத்து விவரம்

மதுரை மாவட்டம், மேலூர்த் துணைவட்டம், கீழவளைவுக் கிராமத்தில் அயன் நன்செய் ம. அ. எண் 125. ஏக்கர் 1. (ஒன்று); இதற்கு ஏற்பட்ட எல்லா உரிமைகளும் உட்பட.

ஒப்பம், சா. சங்கரலிங்கம்.

சான்றினர்:

1. அருள் நம்பி, நல்லதம்பி புதல்வர், கீழவளைவு.
2. கபிலன், கார்மேகம் புதல்வர், கீழவளைவு.

எழுதியவர்:

திருமலையப்பன், சின்னச்சாமி புதல்வர், கீழவளைவு.

## 29. குடிக்கூலி ஆவணம்.

பிலவங்க ஆண்டு, ஆவணித் திங்கள், 15ஆம் நாள் (31—8—1967), மதுரை, சொக்கிகுளம், திருவள்ளுவர் தெரு, 25ஆம் எண் இல்லத்திலிருக்கும், இந்து, வாணிகம், சின்னச்சாமி புதல்வர், செந்தாமரைக் கண்ணன் 1, மேற்படி சொக்கிகுளம், இளங்கோவடிகள் தெரு, 34ஆம் எண் இல்லத்திலிருக்கும் சிவக்கண்ணுவின் புதல்வர், இந்து, மதுரை நகராட்சி எழுத்தர், வேலுச்சாமி 2. ஆகிய நாம் இருவரும் சேர்ந்து எழுதிக் கொண்ட வீட்டு வாடகை ஆவணம் என்னவென்றால்:

முதல் நபருக்குச் சொந்தமானதும், கீழே சொத்து விவரத்தில் கண்டதுமான வீட்டில் குடியிருந்து வருவதற்காகத் திங்கள் ஒன்றுக்கு வாடகை ரூ. 35. (முப்பத்தைந்து) வீதம் ஓராண்டு வாடகைக்கு விடுவதாகவும், அதன்படி இரண்டாவது நபர் குடியிருப்பதாகவும், ஒப்புக் கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு மாத வாடகைப் பணத்தையும் 10ஆம் தேதிக்குள் முதல் நபரிடம் இரண்டாவது நபர் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது நபர் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வாடகை செலுத்தாவிடினும், மேலே கண்டபடி

ஓராண்டுக் கெடு முடிந்ததும் வெளியேறுவிடினும், வீட்டில் சட்டப்படி நுழைந்து அனுபவித்துக் கொள்ள முதல் நபருக்கு உரிமை உண்டு. அதற்கான செலவு தொகையையும் இரண்டாவது நபர் கட்டிக் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேலும் நிலுவை நிற்கும் வாடகைப் பணத்திற்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. (ஒன்று) வீதம் ஏற்படும் வட்டியையும், செலவு தொகையையும் இரண்டாவது நபரிடம் பெற்றுக்கொள் வதற்கு முதல் நபருக்கு உரிமை உண்டு.

முதல் நபர் ஆண்டுக்கு ஒருமுறை தம் செலவில் வாடகை வீட்டுக்கு வெள்ளையடித்துக் கொடுக்கவேண் டும். வீட்டில் எந்தவித மாறுதல்களும் செய்ய இரண் டாவது நபருக்கு உரிமை இல்லை. முதல் நபரின் இசை வில்லாமல் இந்த வாடகை உரிமையை மாற்றவோ கீழ் வாடகைக்கு விடவோ இரண்டாவது நபருக்கு உரிமை இல்லை.

வீட்டு வரியையும் மின்சார வரியையும் முதல் நபரே செலுத்தவேண்டும். முதல் நபரின் இசைவின் பேரில் மேலும் ஓர் ஆண்டுக்கு வேறு பத்திரத்தின் மூலம் இரண்டாவது நபர் வீட்டை வாடகைக்கு வைத் துக்கொள்ளலாம்.

இந்தப்படிக்கு நாம் இருவரும் மனம் ஒப்பி எழுதிக் கொண்ட வீட்டு வாடகை ஆவணம்.

## சொத்து விவரம்

மதுரை சொக்கிகுளம், இளங்கோவடிகள் தெரு 35ஆம் எண் வீடு. மறு அளவு எண் 185.

ஒப்பம்,

செந்தாமரைக் கண்ணன் 1.

வேலுச்சாமி 2.

சான்றினர்:

1. இராமசாமி, பெரியநாயகம் புதல்வர், சொக்கிகுளம்.
2. அருணசலம், திருஞானசம்பந்தம் புதல்வர், சொக்கிகுளம்.

எழுதியவர்:

செல்வநாயகம், மாணிக்கவாசகம் புதல்வர்,
சொக்கிகுளம், மதுரை.

146720

T6

031(9)

N67

RTR/1142

செல்வ நிலையம்

மதுரை

கிடைக்குமிடம்:- போன்: 4517.

A. S. ஜெகதீசக்கோன் புக் ஷாப்,

(Prop: J. ராஜகோபால்)

13, புதுமண்டபம், மதுரை-1.

Printed by C. V. N. Press, Madurai:-67.